உ

# அருள் ஒளி



கந்தசஷ்டி விழாச் சிறப்பு மலர்

வெளியீடு :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
2016

119

## அமரர் தெ.து. ஜயரட்ணம் அவர்களின்


( முன்னாள் தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

( முன்னாள் அதிபர், மகாஜனக் கல்லூரி )

# 101வது நினைவுப் பேருரை வைபவம்









# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

ஐப்பசி மலர்

2016

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை, இலங்கை.

பதிவு இல. : ISSN 2362 - 0587

ISBN 978 - 955 - 23 - 0019 - 3


e-mail : thurkaiammantemple@gmail.com

Face book: tellidurga@gmail.com


# தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு அகவை 200 பூர்த்தி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி *1816* டானியல் பூவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தென்கிழக்காசியாவில் அமைக்கப்பட்ட கலவன் பாடசாலைகளில் மூத்த பாடசாலையாக வரலாற்றாளர் கருதுகின்றனர். இப்பாடசாலையில் ஆரம்பத்தில் கல்வி கற்கச் சென்ற மாணவர்கள் கிறீஸ்தவர்களாக மதம் மாற்றப்பட்டனர். யூனியன் கல்லூரியின் விடுதிச் சாரைலயில் பலவூர் மாணவர்களும் கற்றுப் பயன் பெற்றனர்.

இப்பாடசாலையின் ஆசிரியராக விளங்கிய பாவலர் துரையப்பாபிள்ளை தெல்லிப்பழையில் மகாஜனக் கல்லூரியை ஆரம்பித்தார். மகாஜனக் கல்லூரியில் மாணவர் தொகை அதிகரித்தது. யூனியன் கல்லூரி நிர்வாகம் அனைவருக்காகவும் பாடசாலையை அகலத்திறந்தது. சமய வேறுபாடுகளற்ற ஒரு கல்லூரியாக மிளிர்ந்தது. ஆயிரக் கணக்கான மாணவர்கள் இக் கல்லூரியில் கற்று உயர் வாழ்வு பெற்றார்கள். இக் கல்லூரியின் வியத்தகு வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவராக காலஞ்சென்ற அதிபர் I.P. துரைரட்ணம் அவர்களை இன்றுவரை கல்லூரிச் சமூகம் போற்றுகிறது. கல்லூரியின் கல்வி விருத்தி, விளையாட்டுத்துறை வளர்ச்சி அனைத்துக்கும் வித்திட்ட பெருமகன் என இவரைப் பலரும் போற்றுகிறார்கள்.

இன்று இப்பாடசாலையில் 96 வீதமும் சைவசமய மாணவர்களே கற்கிறார்கள். பழைமையான கிறீஸ்தவ ஆலயமும், சைவ ஆலயமும் பாடசாலை வளாகத்தில் பேணிப்பாதுகாத்து வரப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் மிஷனரியால் முதன் முதலாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலை யூனியன் கல்லூரி வளாகத்திலேயே இயங்கியதாக அறியமுடிகிறது. ஈழத்து கல்வி வரலாற்றில் யூனியன் கல்லூரி பல்துறை பரிமாணங்களுடன் செயற்பட்டதாக அறியமுடிகிறது. இக்கல்லூரியில் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நீண்டகாலம் ஆசிரியப் பணியாற்றியவர். அம்மையார் இக்கல்லூரியின் பெருமையையும் அன்றைய அதிபர்களின் ஆளுமையையும் சொல்லிப் பெருமைப்படுவார்கள்.

இருநூறாவது ஆண்டு விழா கல்லூரிச் சமூகத்தால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பல நாடுகளிலிருந்து பழைய மாணவர்கள் வருகைதந்து சிறப்பித்தனர். நினைவு முத்திரையும், சிறப்பு மலரும் வெளியிட்டனர். இருநூறாவது ஆண்டு நினைவாக இருமாடிக் கட்டடம் கட்டப்பெற்றமையும் சிறப்புக்குரிய விடயமாகும். சூரிய சந்திரர் உள்ளவரை இக்கல்லூரி சிறக்க நாமும் வாழ்த்தி மகிழ்வோம்.

- ஆசிரியர்


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# நமது அடிப்படை

**( சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாணச் சொற்பொழிவு )**

விஷயமோ மிகவும் பெரியது, நேரம் மிகக் குறைவாகவே உள்ளது. ஒரு சொற்பொழிவில் இந்துக்களின் மதத்தைப் பற்றிய ஒரு முழுமையான ஆராய்ச்சியை நடத்துவது என்பது முடியாதது. எனவே நமது மதத்தின் முக்கியக் கருத்துக்களை என்னால் இயன்ற அளவு எளிய மொழியில் உங்கள் முன் வைக்கிறேன்.

நம்மை நாம் இப்போது நாகரிகமாக அழைத்துக் கொள்கின்ற 'ஹிந்து' என்ற வார்த்தை, அதன் முழுப்பொருளையும் இழந்துவிட்டது. ஏனெனில் இந்த வார்த்தை சிந்துநதிக்கு மறுபக்கத்தில் வாழ்ந்தவர்களைக் குறிப்பிடுகிறது. அவ்வளவுதான். சிந்து என்ற சொல் பழங்காலப் பாரசீகர்களால் சிதைக்கப்பட்டு ஹிந்து என்று ஆகியது; சிந்துநதிக்கு மறுபுறம் வாழ்ந்த அனைவரையும் அவர்கள் ஹிந்து என்றே அழைத்தார்கள். இவ்வாறு இந்தச் சொல் நம்மிடம் வந்தது. முகமதியர்களின் ஆட்சிக் காலத்தில் நாமும் இந்தப் பெயரை ஏற்றுக் கொண்டோம். இந்த வார்த்தையைப் பயன்படுத்துவதால் எந்தத் தீமையும் இல்லை. ஆனால் நான் முன்பே சொன்னது போல், அது தன் பொருளை இழந்து விட்டது. தற்காலத்தில் சிந்துநதிக்கு இந்தப் பக்கத்தில் வாழ்கின்ற எல்லா மக்களும் பழங்காலத்தைப் போல் ஒரே மதத்தைப் பின்பற்றவில்லை. எனவே இந்தச் சொல் தற்போது இந்துக்களை மட்டுமன்றி முகமதியர்கள், கிறிஸ்தவர்கள், சமணர்கள் என்று இந்தியாவில் வாழ்கின்ற அனைவரையும் குறிக்கிறது. அதனால் இங்கு இந்து என்ற சொல்லை நான் பயன்படுத்தப்போவதில்லை. அப்படியானால் எந்த வார்த்தையை உபயோகிப்பது? நாம் பயன்படுத்தத்தக்க வார்த்தைகள் இரண்டே : வைதீகர்கள் – வேதத்தைப் பின்பற்றுபவர்கள்; அல்லது இதைவிடச் சிறப்பாக, வேதாந்திகள் – வேதாந்தத்தைப் பின்பற்றுபவர்கள்.

உலகின் சிறந்த மதங்களுள் பெரும்பாலானவை சில குறிப்பிட்ட நூல்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன; அவற்றுள் கூறப்பட்டுள்ளதை இறைவனின் வார்த்தைகள் என்றோ, இயற்கையைக் கடந்த சில தேவதைகளின் வாக்குகள் என்றோ அவர்கள் நம்புகிறார்கள். அவையே அவர்களது மதத்தின் அடிப்படையாக உள்ளன. இன்றைய மேலை நாட்டு அறிஞர்களின் கருத்துப்படி, இந்த நூல்களுள் பழமையானது இந்துக்களின் வேதங்களே. எனவே வேதத்தைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்வது அவசியமாகும்.

வேதங்கள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற நூற்களஞ்சியங்கள் மனிதர்கள் சொன்னவை அல்ல. அவற்றின் காலமும் நிர்ணயிக்கப்படவில்லை; நிர்ணயிக்கப்படவும் முடியாது. நம் கருத்துப்படி, வேதங்கள் என்றுமே உள்ளவை. ஒரு முக்கிய விஷயத்தை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மற்ற மதங்கள் தங்கள் தோற்றத்திற்கு ஒரு தெய்வத்தையோ, பல தூதர்களையோ காரணமாகக் காட்டி, குறிப்பிட்ட சிலர் மூலமாக அவர்கள் அந்த மதத்தை வெளிப்படுத்தியதாகக் கூறுகின்றன. இவ்வாறு தங்கள் அத்தாட்சியை நிலைநாட்டுகின்றன.

ஆனால் இந்துக்களோ வேதங்களுக்கு அப்படியோர் அத்தாட்சியைக் கூறவில்லை. என்றென்றும் நிலையான இறை ஞானத்தை அவை கூறுவதால் அவையும் அழி வற்றவை. அதனால் வேதங்களுக்கு வேதங்களே அத்தாட்சி என்று இந்துக்கள் கூறுகிறார்கள். அவை எந்தக் காலத்திலும் எழுதப்படவில்லை, எந்தக் காலத்திலும் உருவாக்கப்படவில்லை. காலங்காலமாக அவை இருக்கின்றன. எவ்வாறு படைப்பு தோற்றமும் முடிவும் இல்லாமல் எல்லை யற்றதாகவும் நிரந்தரமானதாகவும் இருக் கிறதோ, அவ்வாறே இறையறிவும் தோற்ற மும் முடிவும் இல்லாமல் என்றும் இருக் கிறது. இந்த அறிவுதான் வேதங்கள் (வித் – அறிதல்) என்று அழைக்கப்படுகிறது.

வேதாந்தம் என்ற பெயரால் அழைக் கப்படுவதான அறிவுக் களஞ்சியம், ரிஷி களால் கண்டுபிடிக்கப்பட்டவை. ரிஷி என் றால் 'மந்த்ர த்ரஷ்டா' அதாவது மந்திரத்தை, ஒரு சிந்தனையை நேரே கண்டவர் என்று கூறப்படுகிறது. அவர்கள் அந்தச் சிந்தனை யைக் கண்டவர்களே தவிர, அந்தச் சிந்தனைகள் அவர்களுடையவை அல்ல. வேதத்தின் இன்ன பகுதி இன்ன ரிஷியிட மிருந்து வெளிவந்தது என்றால் அந்தப் பகுதியை அவர் எழுதி னார் என்றோ, அவர் தம் மனத்திலிருந்து அதனை உருவாக்கி னார் என்றோ நினைத்துக் கொள்ளாதீர்கள். ஏற்கனவே இருந்த சிந்தனையை அவர் கண்டார். அவ்வளவுதான். அது பிர பஞ்சத்தில் எப்போதும் இருக்கிறது. ரிஷி அதனைக் கண்டுபிடித்தவர்.

வேதங்கள் முக்கியமாகக் கர்ம காண்டம், ஞானகாண்டம் – செயல் பகுதி; ஆன்மீகப் பகுதி – என்று இரண்டு பகுதி களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கர்ம காண்டம் பல்வேறு யாகங்களைப் பற்றிக் கூறுகிறது. தற்போதைய சூழ்நிலையில் செய்யப்பட முடியாதவை என்று அவற்றுள் பலவும் கைவிடப்பட்டுவிட்டன. எஞ்சியவை ஏதோ ஒருவிதத்தில் இன்றுவரை இருக்கவே செய்கின்றன. சாதாரண மனிதன், மாணவன், இல்லறத்தான், துறவி என்று வாழ்வின் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக் கான கடமைகள் கர்மகாண்டத்தில் முக்கியக் கருத்துக்கள் ஆகும். இவை இன்றும் ஓரளவிற்கு வழக்கத்தில் உள்ளன.

நமது மதத்தின் ஆன்மீகப் பகுதி இரண்டாம் பகுதியான ஞான காண்டத்தில் உள்ளது. இதுவே வேதாந்தம்,வேதங்களின் நிறைவு, வேதங்களின் சார், அதன் லட்சியம் வேதங்களின் சாரமான கருத்து வேதாந்தம் எனப்படுகிறது. இந்தப் பகுதியில்தான் உபநிடதங்கள் உள்ளன. துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்யம் என்று இந்தியாவிலுள்ள மதப் பிரிவுகள் எதுவாயினும், இந்து மதத்தின் ஒரு பிரிவாகத் தன்னைக் கூறத் துணிவுள்ள எந்த நெறியாயினும் அவை வேதங்களின் இந்த உபநிடதங்களை ஏற்றுக் கொண்டாக வேண்டும். அவை அவற்றைத் தங்களுக்கு ஏற்றவாறு பொருள் கொள்ளலாம். ஆனால் உபநிடதங்களை ஏற்றுக்கொண்டே தீர வேண்டும். அதனால் தான் நாம் இந்து என்பதற்குப் பதிலாக வேதாந்தி என்ற சொல்லைப் பயன்படுத்த விரும்புகிறோம். இந்தியாவின் வைதீகத் தத்துவ அறிஞர்கள் அனைவரும் வேதாந்தத்தை ஏற்கத்தான் வேண்டும். தற்கால மதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றுள் சில வளர்ச்சி அடையாதவையாக இருக்கலாம், சில

பயனற்றவை போலவே தோன்றலாம். ஆனால் அவற்றை ஆழ்ந்து படிப்பவர்கள், புரிந்து கொள்பவர்கள், அவையும் உப நிடதக் கருத்துக்களையே ஆதாரமாகக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இந்து மதத்தின் கீழ்நிலைப் பிரிவுகள் ஏதாவது ஒன்றில் காணப்படுகின்ற சின்னங்களை ஆராய்ந்து பாருங்கள். அவற்றுள் பலவும் உபநிடதங்களில் உருவமாகக் கூறப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைவீர்கள். உபநிடத உரு வங்களே காலப்போக்கில் சின்னங்களாக மாறின. அந்த அளவிற்கு ஆழமாக உப நிடதங்கள் நம் இனத்தில் ஊறிப்போயி ருக்கின்றன. உபநிடதங்களில் உள்ள உயர்ந்த ஆன்மீகச் சிந்தனைகளும் கருத்துக் களும் பல்வேறு சின்னங்களின் வடிவில் இன்றும் நம் வீடுகளில் வழிபடப்பட்டு நம்முடன் இருக்கின்றன. இவ்வாறு நாம் பயன்படுத்தி வருகின்ற சின்னங்கள் எல்லாமே வேதாந்தத்திலிருந்து வந்தவை தாம். வேதாந்தத்தில் அவை உருவங் களாகக் கூறப்படுகின்றன. இவை நாடு முழுவதும் பரவி இறுதியில் சின்னங் களாக ஒவ்வொருவரின் அன்றாட வாழ்க்கையோடு ஒன்றிவிட்டன.

வேதாந்தத்திற்குப் பிறகு ஸ்மிருதி கள் வருகின்றன. இவையும் மகான்களால் எழுதப்பட்டவை. ஆனால் அத்தாட்சியைப் பொறுத்தவரை இவை வேதாந்தத்திற்கு அடுத்தபடியில் உள்ளவை. மற்ற மதங் களுக்கு அவற்றின் சாஸ்திரங்கள் போல் நமது மதத்திற்கு உள்ளவை இவை. இந்த ஸ்மிருதிகள் சில குறிப்பிட்ட ரிஷிகளால் எழுதப்பட்டவை என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இந்த நிலையில்தான் அவை பிற மத சாஸ்திரங்களைப் போன் றவை. ஸ்மிருதிகள் இறுதி அத்தாட்சி அல்ல. ஸ்மிருதியில் வேதாந்தத்திற்கு மாறாக ஏதாவது இருக்குமானால் அதை ஒதுக்கிவிட வேண்டும். அதன் அத்தாட்சி போய்விட்டது. இந்த ஸ்மிருதிகள் காலத் திற்குக் காலம் மாறிக்கொண்டே இருப்பதை யும் நாம் காண்கிறோம். சத்திய யுகத்தில் இன்ன ஸ்மிருதி அத்தாட்சி பெற்றது. திரேதா யுகத்தில் இன்ன ஸ்மிருதி. அது போல் துவாபரா யுகத்தில் சிலவும், கலி யுகத்தில் சிலவும் அத்தாட்சி பெற்றிருந்தன என்ற நாம் படிக்கிறோம். ஸ்மிருதிகள் முக்கியமாக மக்களின் பழக்கவழக்கங்களை நெறிப்படுத்துபவை. காலத்திற்கேற்ப நாட்டின் அடிப்படைச் சூழல்கள் மாறி, வேறு சூழல்களின் ஆதிக்கம் ஏற்படும் போது மக்களின் வாழ்க்கை முறை மாறு வதற்கு ஏற்றாற்போல் ஸ்மிருதிகளும் மாறும். இந்த விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேதாந்தக் கோட்பாடுகள் மாறாதவை. ஏனெனில் அவை மனிதனிலும் இயற்கை யிலும் உள்ள மாறாத உண்மைகளின் அடிப்படையில் எழுதப்பட்டவை. அவை ஒருபோதும் மாறாது. ஆன்மா பற்றிய உண்மைகள் மாறும். சொர்க்கத்திற்குப் போவது போன்ற கருத்துக்கள் எப்போதுமே மாறமுடியாது. ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்பு அவை இருந்தது போலவே இன்றும் உள்ளன. லட்சக்கணக்கான ஆண்டு களுக்குப் பிறகும் இப்படியே இருக்கும். ஆனால் சமுதாய நிலைகள்; பரஸ்பரத் தொடர்பின் அடிப்படையிலேயே முற்றிலும் அமைவதான பழக்கவழக்கங்கள் சமுதாயம் மாறும்போது மாறியே தீரும். எனவே

குறிப்பிட்ட ஒரு காலத்திற்குத்தான் சரியாகவும் பொருத்தமானவையாகவும் அவையும். மற்ற காலங்களுக்கு ஏற்புடையவையாக அமையாது. ஒரு குறிப்பிட்ட உணவு ஒரு காலத்தில் உண்பதற்கு அனுமதிக்கப்பட்டது, அடுத்த காலகட்டத்தில் அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் அந்தக் காலத்தில் அந்த நியதியும் பொருந்தவில்லை, காலநிலையும் மற்றச் சூழல்களும் வேறு பல சூழல்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. பிற்கால ஸ்மிருதிகள் உணவையும் பிறவற்றையும் கைவிட்டன.

இவற்றைத் தவிர தந்திர நூல்கள் உள்ளன. இவை சில விஷயங்களில் புராணங்களைப் போலவே உள்ளன. இவற்றுள் சில கர்மகாண்டத்தில் உள்ள யாகம் பற்றிய பழைய கருத்துக்களைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சி காணப்படுகிறது.

இந்த நூல்கள் அனைத்தும் சேர்ந்ததே இந்துக்களின் சாஸ்திரங்கள், இவ்வளவு அதிகமான புனித நூல்கள் இருக்கின்ற ஒரு நாட்டில், தன் ஆற்றலின் பெரும் பகுதியை இத்தகைய தத்துவ நாட்டத்திலும், ஆன்மீகச் சிந்தனையிலும் செல விட்ட ஓர் இனத்தில் (எத்தனை ஆயிரம் இவ்வளவு மதப்பிரிவுகள் இருப்பது இயல்பானது. இன்னும் ஆயிரக் கணக்கில் இல்லாததுதான் ஆச்சரியம். அந்தப் பிரிவுகள் சில கோட்பாடுகள் எல்லா வற்றையுமோ அவற்றின் ஆன்மீகக் கோட் பாடுகள் அனைத்தையுமோ அறிந்து கொள்ள நமக்கு நேரமில்லை. எனவே இந்தப் பிரிவுகள் அனைத்திற்கும் அடிப் படையானதும், ஒவ்வோர் இந்துவும் நம்பியே தீரவேண்டுவதுமான சில கருத்துக் களை நான் பேச எடுத்துக் கொள்கிறேன்.

முதலாவது, படைப்பைப் பற்றியது; அதாவது இயற்கை, பிரகிருதி, மாயை பற்றியது. மாயை எல்லையற்றது, தோற்றமில்லாதது. இன்ன நாள் இந்த உலகம் உருவாக்கப்பட்டது, ஒரு கடவுள் வந்து இந்த உலகங்களைப் படைத்தார், அதன் பிறகு இன்று வரை அவர் தூங்கிக் கொண்டிருக்கிறார் என்பதில்லை; ஏனெனில் அவ்வாறு நடக்க முடியாது. படைப் பாற்றல் இன்னம் இயங்கிக் கொண்டே தான் இருக்கிறது. கடவுள் எப்போதும் படைத்துக் கொண்டே இருக்கிறார், ஒரு போதும் ஓய்வு கொள்வதில்லை. 'நான் ஒரு கணம் ஓய்வெடுத்தாலும் இந்தப் பிரபஞ்சம் அழிந்துவிடும்' என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் சொல்வதை நினைவு கூருங்கள், நம்மைச் சுற்றி இரவும் பகலும் இயங்கிக் கொண்டே இருக்கின்ற அந்தப் படைப்பாற்றல் ஒரு வினாடி நின்று போனாலும் எல்லாம் தரைமட்டமாகி விடும். பிரபஞ்சம் முழுவதும் அந்தச் சக்தி இயங்காத நேரமே கிடையாது.

ஆனால் பிரளயம் அல்லது சுழற்சி நியதி (Law of Cylces) என்பது உள்ளது. படைப்பிற்கான சமஸ்கிருதச் சொல்லைச் சரியாக மொழிபெயர்த்தால் அது வெளிப் பாடு (Projection) என்று பொருள்படுமே தவிர படைப்பு (Creation) என்று பொருள் தராது. ஏனென்றால், ஆங்கில மொழியில், படைத்தல் என்ற சொல் சூன்யத்திலிருந்து ஏதோ ஒன்று தோன்றுதல், ஒன்று மில்லாததிலிருந்து படைப்பு, இல்லாத ஒன்று இருப்பதாக மாறுதல் என்றெல்லாம், துரதிஷ்டவசமாக, மிகவும் வேதனையைத் தருகின்றன, முதிர்ச்சியற்ற பொருள் களைத் தருகிறது. இந்தக் கருத்தை நம்பும்படிக் கூறி உங்களை நான்

இழிவுபடுத்த மாட்டேன். இதற்கு நம் சொல் 'வெளிப்பாடு' என்பது. இந்த இயற்கை மொத்தமும் இருக்கிறது; பிறகு நுட்ப மாகிறது, மறைகிறது. ஒரு குறிப்பிட்ட கால ஓய்விற்குப் பின்னர், வெளிப்படுவது போல் மீண்டும் எல்லாப் பொருட்களும் தோன்றுகின்றன; அதே சேர்க்கை, அதே பரிணாமம், அதே வெளிப்பாடுகள் தோன்று கின்றன. ஒரு குறிப்பிட்ட காலம் விளை யாடல் நடைபெறுவது போல் தோன்றுகிறது. பின்னர், சேர்ந்த அனைத்தும் மீண்டும் சிதறி, நுட்பமாகி, மேலும் நுட்பமாகி மாறி எல்லாம் மறைந்து விடுகிறது. மறுபடியும் வெளிவருகிறது. இவ்வாறு ஓர் அலையைப் போல் முன்னால் வருவதும் பின்னால் போவதுமாக காலங்காலமாக இந்த இயக்கம் நடைபெற்றுக் கொண்டேயி ருக்கும். காலம், இடம், காரணம் எல்லாம் இந்த இயற்கைக்குள்தான் உள்ளன. எனவே இந்தப் பிரபஞ்சம் ஒரு காலத்தில் படைக்கப்பட்டது என்று சொல்வது சுத்த முட்டாள்தனம். அதன் தோற்றத்தைப் பற்றியோ முடிவைப் பற்றியோ எந்தக் கேள்வியும் எழ முடியாது. எனவே நம் சாஸ்திரங்களில் எங்கெல்லாம் பிரபஞ் சத்தின் தோற்றம் மற்றும் முடிவு என்று வருகிறதோ அதனை ஒரு சுழற்சியின் தோற்றம் மற்றும் முடிவு என்று கொள்ள வேண்டும். இதுவே அதன் பொருள், வேறெதுவும் அல்ல.

எது இதனைப் படைத்தது? கடவுள் புழன (கடவுள்) என்னும் இந்த ஆங்கிலச் சொல் மூலம் நான் எதைக் குறிப்பிடு கிறேன்? சாதாரணமாக அந்த வார்த்தை ஆங்கில மொழியில் கூறப்படும் பொருளில் அல்ல. நான் கொள்ளும் பொருளுக்கும் அதற்கும் மிகுந்த வித்தியாசம் உள்ளது. அதனைக் குறிப்பதற்குப் பொருத்தமான வேறு ஆங்கிலச் சொல் எதுவும் இல்லை. எனவே 'பிரம்மம்' என்ற சம்ஸ்கிருதச் சொல்லையே பயன்படுத்துகிறேன். அவர் இந்த எல்லா வெளிப்பாடுகளுக்கும் பொதுக் காரணமாக இருக்கிறார்.

இந்த பிரம்மம் என்பது என்ன? அவர் என்றும் இருப்பவர், என்றும் தூய்மை யானவர், என்றும் விழிப்போடு இருப்பவர், எல்லா ஆற்றலும் கொண்டவர், எல்லாம் அறிந்தவர், கருணை மயமானவர், எங்கும் நிறைந்தவர், உருவமற்றவர், பிரிவு இல்லாதவர். அவர் இந்தப் பிர பஞ்சத்தைப் படைக்கிறார். அவர் எப் போதும் படைத்துக் கொண்டும் காத்துக் கொண்டும் இருப்பதாகச் சொன்னால் இரண்டு சங்கடங்கள் எழுகின்றன. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஏற்றத்தாழ்வு களைப் பார்க்கிறோம். ஒரு மனிதன் பிறந்ததிலிருந்தே மகிழ்ச்சியாக இருக் கிறான், மற்றொருவன் துயருறுகிறான்; ஒருவன் பணக்காரனாக இருக்கிறான், மற்றொருவன் ஏழையாக இருக்கிறான். இது ஓரவஞ்சனையையே காட்டுகிறது. அதோடு, படைப்பில் கொடூரம் இருக் கிறது; வாழ்க்கையின் நியதியே மரண மாக அல்லவா உள்ளது. ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தை நார்நாராகக் கிழிக்கிறது. ஒவ்வொருவனும் தன் சொந்த சகோதரனிடமிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பறித்துக் கொள்ள முயல்கிறான். இந்தப் போட்டி, கொடூரம், பயங்கரம், ஏக்கப் பெருமூச்சுக்கள் எல்லாம் இரவும் பகலும் இதயங்களைக் கிழித்துக் கொண்டே இருக்கின்றன. இதுதான் நமது உலகத்தின் நிலைமை.

*(மிகுதி அடுத்த இதழில்....)*

# உயர்திரு சுவாமி விபுலாநந்தரவர்கள்

## ( முப்பதாம் ஆண்டு விழா 1935 திருவண்ணாமலை சைவர் மாநாடு )

**உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.**

யாவருக்குந் தந்தை தாயாகிய எம்பெருமானையும் எம் பெருமாட்டியையும் உள்ளத் திருத்தி, தம்மை யடைந்தோரது இன்னல்களை நீக்கியருளும் மூத்தபிள்ளையாரது திருவடிகளைத் தொழுது, தண்டமிழ்க்குரவராகிய இளையபிள்ளையாரது பாதப்போதினைத் தலைக்கணியாக்கி, இப்பேரவையிலெழுந்தருளியிருக்கும் பெரியோருக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்புடையீர்! இங்கு வந்திருந்து தொண்டாற்றுமாறு நீவிர் பணித்த கட்டளையினை வாழ்க்கையில் எய்திய பெரும் பயன்களுள் ஒன்றாக மதிக்கின்றேன். "ஆசையோடும் அரனடியா ரடியாரை யடைந்திட்டு, அவர்கருமம் உன்கருமமாகச் செய்து, கூசிமொழிந்து அருண்ஞானக் குறியினிற்று, கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே," எனவுரைத்த அருள் வாக்கினைக் கடைப்பிடித்தொழுக முயலுவேற்கு இப்பணி உவமையினை யளிக்கின்றது. ஈசனது பழவடியாராகிய உங்களுடைய முன்னிலையிலே, மொழிபவற்றைக் கூறி மொழிய வேண்டியவனாகின்றேன். அங்ஙனமாயினும், கூசாது மொழிதற்குரிய பொருளும் ஒன்று உளது. அப்பொருள் தான் அகவிருளிரிய மெய்ஞ் ஞானவொளி பரப்பும் உண்மைத் திருநெறியாகிய சைவத்திற்குச் சிறப்பியல்பாக வமைந்த பொருள். எண்ணிலா உயிர்க் கூட்டங்களை ஆண்டு நடத்தும் தனிப்பெருந் தலைவனாகிய இறைவனொருவனுளன், என்னுங் கொள்கையினையடைய ஏனைய மதத்தினர்க்கும் ஓரேவழி ஒப்பமுடிந்த அப்பொருள் "அருள் ஞானம்" எனப்படுவது. அது அனைத்துப் பொருளினும் தலையாயது என்பது சைவ நூன் முடிபு. "அருளிற் பெரிய தகிலத்து வேண்டும், பொருளிற் றலையிலதுபோல்" என்னும் ஆன்றோர் வாக்கினை நோக்குவார்க்கு இவ்வுண்மை இனிது புலப்படுவதாகும். இருள் மலமாகிய அறியாமை நீங்கி, வீடு பேறடைதற்கு இறைவனது கருணையே வாயிலாகி நிற்கின்றது. அஃதில்லாத வழி, அறியாமை நீக்கமும் வீடு பேறெய்துதலும் இலவாமாதலின், ஆக்கமனைத்திலும் மிக்கதொன்றாகிய பேரின்ப வீட்டினையடைவிப்பது இறைவனது பெருங்கருணைத் திறமேயென்பது முடிந்த முடிபாகின்றது. அப்பேருட்டிறத்தின் பெற்றியினை யுணருகின்ற உணர்வே எல்லா ஞானத்திலும் சிறந்த ஞானமாகும். இஃது எய்திய வழி, அனைத்து நலனும் எய்துவவாதலின், இதனை முரசறைந்து உலகனைத்தினுக் குரைப்பது சைவர் மேற்பொறுத்த கடனாகும். இத்திருத்தொண்டினைச் செய்வதற்கு யாம் ஒரு சிறிதேனும் பின்னிற்க வேண்டியதில்லை. சைவராகிய யாம் ஒருங்கு கூடுமிடத்திலெல்லாம் நமது தலைவனது

பேரருட்டிறத்தின் பெற்றியினைக் கூசாது மொழிவோமாக. யாம் அவ்வருணெறி நின்று நீடு வாழ்வோமாக. அது நம்மை உய்விப்பதாக.

நமது ஆண்டவனை அவனது மெய்யடியார் பலர் "அருட்கடல்" எனப் புகழாநின்றனர். கடல் எலையற்ற நீர்மையது. அவ்வண்ணமே அருளும் எல்லையற்ற நீர்மையது. அருளினாலே இவ்வுலகிடையுதித்தோம். அருளினாலே உயிர்வாழுகின்றோம். அருளே நம்மை நற்கதியிற் புகுத்துவது. தாயாகி நம்மை வளர்த்தெடுத்துத் தந்தையென வந்து பெறுதற்கரிய சால்பினை நல்கிக், குருவடிவாகி இருளினையகற்றித், துணைவனெனவும் துணைவியெனவும், இன்னகைப் புதல்வரெனவும், புதல்வியரெனவும், அன்புடை மாமனெனவும் மாமியெனவும், துய்ப்பனவாகவும் தோற்றி நம்மை நல்வழிப்படுத்துவது அப்பேரருளேயாம்.

இவ்வுண்மையினை யறியா மாந்தர் உடல் வலியும் மனவலியுங் குன்றித் தாயினையிழந்த சேயினைப் போல அல்லலுறுவர். இதனை உணர்ந்தோர் வேண்டிய பொருளனைத்தினையும் பெற்று இவ்வுலகில் வேண்டா துலகனைத்தும் ஆளுவர் காண், என்றுமேயிப்பொருளோடே காந்தத்துள்ளவரே" எனக் கவிவாணராகிய பாரதியார் கூறுகின்றார். இத்துணைச் சிறப்பு வாய்ந்த அருளினையடைதற்குரிய வழியினைச் சைவ சாத்திரங்களனைத்துங் கூறுகின்றன. ஆதலினாலன்றோ அவையெல்லாம் "அருணூல் எனவும், "அருட்பா" வெனவும், "அருட்பனுவல்" எனவும் விதந்து பாராட்டப்பட்டன. திருவருட் செல்வராகிய பெரியார் பலர் ஆங்காங்குக் குறிப்பிட்ட சிற்சில முடிபுகளைத் தொகுத்து நோக்குவோமாக.

பண்டிதத் திறமை கருதி உலகிற் பல கலைஞானங்களையும் ஆராய்ந்து உளங்கொள்ளுவோர் ஆண்டவனது பேரருளுக்குத் தம்மைக் கொள்கலமாக்கிக் கொள்ளாதொழியினு மொழிவர். உலகரால் மதிக்கப்படுகின்ற கல்வியறிவு நிரம்பப் பெறாதவர் ஒரேவழி ஆண்டவனது அருளினாலே உண்மை ஞானமெய்தி எல்லா நலன்களுக்குமிருப்பிடமாவர். "ஆண்டவனது பேரருளினைப் பெறுதற்குக் கல்வியினுந் தியானஞ் சிறந்தது, நியாயவாதத்தினும் நெடுமூச்சுச் சிறந்தது, கவிமாரியினும் கண்ணீர்மாரி சிறந்தது, நூலாராய்ச்சியினும் வழிபாடு சிறந்தது. மண்ணோக்கிய சிந்தையினும் வானோக்கிய சிந்தை சிறந்தது' என உண்மையறிஞர் உரையா நிற்பர்.

"சுருதி சிந்தனா பாவனா தரிசனை கருதி யுய்த்து மயக்கங் கடிக" என்றமையால் அருட்டிறத்தின் பெற்றியினை உரைக்கும் நூற்பொருளினைக் கேட்டல் இன்றியமையாதது. ஆயினும் அது முதற்படியேயாம். சிந்தனையும் பாவனையும் தரிசனையும் அதன்பின் எய்தற் பாலன. யாம் எதனைச் சிந்திக்கின்றோமோ அதுவாகின்றோம் என்பது உண்மை நூலுக்கும் உலகர் நூலுக்கும் ஒப்பமுடிந்த முடிபாகும். உள்ளத்திலே உதிக்கின்ற எண்ணங்கள் பலவற்றுள்ளும் ஒன்று நமக்குச் சிறப்புடையதாகத் தோற்றியவழி, நாம் அதனை மீட்டு மீட்டும் மனத்தின் முன்னிலையிற் கொண்டு வந்து நிறுத்தி, அதனது பூரணவியல்பினை அளவிட முயலுகின்றோம்; அம்முயற்சி தியானமாகின்றது. தியானத்தினாலே

அவ்வெண்ணம் தெளிவடையத் தியானிக்கும் உள்ளமானது உவகைமேவிய வியப்பி னாலே, தன் செயலிழந்து தியானிக்கும் பொருளினோடு ஒன்றுபட்டு நிற்கும். இந்நிலையே பாவனை யெனப்படுவது, மனத்தின் செயல்களுள்ளே சாதாரண எண்ணமானது தெளிந்த இலக்கின்றிச் சஞ்சரித்து, ஒன்றினை விடுத்து மற்றொன் றினைப் பற்றி அலைவுறா நிற்கும். சிந்தனை யானது குறித்த இலக்கினை உடைய தாதலின், ஒன்றினையே பற்றி அதனை ஆழ்ந்து ஆராயும் ஆற்றலாக வெளிப்படும். இனிப் பாவனை நிலையிலே சிந்திக்கப் பட்ட பொருளின் சிறப்பியல்பு உள்ளத்தினை நிரப்புமாதலின், அதனால் உவகையும் வியப்புமெய்திய உள்ளமானது எப்பொரு ளினும் மெய்ப்பொருளாகத் தோன்றும் செம்பொருளினைப் பற்றிய காரணத்தி னாலே தன் செயலிழந்து பரவசப்பட்டு நிற்கும். "சாந்தம், சிவம், சுந்தரம், அத்வைதம்" எனப் போற்றப்பட்ட செம்பொருள் தன்னி யல்பிலே நிறைந்த அறிவும், நிறைந்த அழகும், நிறைந்த உவகையும் மேவியதாத லின், அதனைப் பற்றிய உள்ளம் மலர்ச்சியும் உயர்வும் பெற்று நிற்பது பொருத்தமேயாம்.

"கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி" என்றமையினால், உரையும் உணர்வும் கடந்து நின்ற உண்மைப் பொருள் உருவோடு தோற்றுமிடத்து எய்தும் உரு அருளுருவேயாமென்பது பெறப்படுகின்றது. "அன்புஞ் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்" என்றற்றொடக் கத்து உறுதி மொழியும் இதனையே புலப்படுத்துகின்றது. ஆண்டவனது அருள் வடிவத்தைச் சிந்தனை செய்யப் புகுவோர் ஆங்கவற்குந் தமக்குமிடையே யாதாயினு மோர் அன்புத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமெனப் பத்தியோக நூல்கள் உரையா நிற்கும். பரந்த இஞ் ஞாலத்தினையும், விண் மீன்களையும் உயிர் வாழ்க்கையில் நிகழும் இன்பத் துன்பங்களையும் உளங்கொண்டாராய்ந்த ஆண்மகனொருவன் இவை தம்மை ஆக்கியும் அழித்துங் காத்தும் வருகின்ற தலைவனுளன் எனக் கேள்வியுற்ற ஞான்று, அத்தலைவன்பால் அச்சத்தோடு கூடிய அன்பினைச் செலுத்துவான். இந்நிலை யிலே ஆண்டானடிமைத் தொடர்பு ஏற்படு கின்றது. தலைவனிடத்துள்ள அன்பு பெருகுதலினாலே அச்சம் ஒருபுடையகல, முன்னர்ச் சேய்மைக்கண் ஆண்டவனாகத் தோன்றிய அருள்வடிவம் பின்னர் அணிமைக்கண் அன்பு நிறைந்த தாயகாவோ, தந்தையாகவோ காணப்படும். முன்னர்த் தன்னை அடிமையாகக் கண் டோன் பின்னர்த் தான் ஆண்டவனுடைய புதல்வருளொருவனென அறிவான். இந் நிலையே புத்திரமாக்கமென நூல்களாற் கூறப்படுவது. அச்சம் முற்றிலுமகல அன்பு தனித்து நிற்கும் நிலையே தோழநெறி யெனப்படும் சகமார்க்கமாகும். மூன்று நிலையும் அருளுருவத்தைப் பற்றி நிற்பனவேயாம்.

ஆண்டவனது அருட்கருணை இல்லாத வழி நமக்கு உய்யுநெறியில்லை. கருணை யினை நாம் அவாவி நிற்கின்றோம். ஆதலி னாலே நம்மாலியன்றவரை பிறவுயிர்கள் மீது கருணை பாராட்ட வேண்டியவரா கின்றோம். அத்தகைய கருணையினைத் திருவள்ளுவப் பயன் செல்வத்துளொன் றாக வைத்து "அருட்செல்வம்" எனக் குறியிட்டு வழங்கும். நாம் காதலிக்கின்ற தலைவனுக்கு இயல்பாகவமைந்த அருள் விளக்கம் நம்மிடத்து எத்துணையாகக்

காணப்படுகின்றதோ, அத்துணைக்கு நாம் நமது தலைவனை அணுகி நிற்பவராவோ மாதலினாலே, அருட்செல்வத்தினைப் பெருக்குவது சைவராகிய நமக்கு இன்றி யமையாத சாதனமாயிற்று.

அருளொழுக்கம் பெருகியவழி, வெறுப்பு, வெகுளி என்னுமிவை தாமே யகல்வனவாம். அருணிறைந்த உள்ளத்தி னுள்ளே அச்சம், கவலை, பொறாமை, அசூசை, துன்பம், மிடி, லோபம் என்பன ஒரு சிறிதும் புகமாட்டா. அருளினால் அகன்ற சிந்தையினை யுடையோரே பெரியோ ரெனப்படுவார். இவரைக் காண்போரனை வரும் இவரது நட்பினை விழைந்து நிற்பார். உலகனைத்தும் இவர்க்குச் சுற்றமாகும். புகழ், பொருள், நட்பு ஆகிய மூன்றும் இவர் தம்மை வந்தடைவாதலின், இவரது வாழ்க்கை பல திறத்தினும் நிறைவு பெற்றுத் தோன்றும்.

அருண்ஞானக் குறியினிற்போர் தம்முடைய சிறுமையையும் தலைவனு டைய பெருமையையும் ஒருங்கு சேர வைத்துச் சிந்திக்க வேண்டும். தம்முடைய சிறுமையை மாத்திரம் தனித்து நினைத்தல் கவலை, துன்பம், மிடியென்னுமிவற்றிற்கு உள்ளத்தைப் புகலிடமாக்குமாதலின், அது செய்யத்தகாதென்றறிதல் வேண்டும். தலைவனுடைய பெருமையை நினைவு கூடுதலினாலே, அவனை யார் சார்ந்து நின்ற சார்புபற்றி நமது உள்ளத்திலே ஒரு பெருமிதந் தோன்றும். அப் பெருமித வுணர்வு நமக்கு எல்லாச் செல்வத்தையும் தரவல்லது. “எங்குமியாமொருவர்க்கும் எளியோ மல்லோம், யாவர்க்கும் மேலா னோர் என்றிறுமாப்பெய்தித், திங்கண் முடியாரடியா ரடியோ மென்று, திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே,” என்றபடி “எங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோம்” என்னும் பெருமிதவுணர்வு தலைவனது சார்பினால் நமக்கு ஏற்படுவது; இது இம்மை மறுமைச் சுகம் இரண்டினையுந் தருவது. தனித்த மக்களுக்கு மாத்திரமல்ல, மக்கட் கூட்டத்தினர்க்கும் இவ்வுணர்வு உயர்வினைத் தருவதென்பதற்கு உலக சரித்திரமே சாட்சியாகும். ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடையவரசும் உலகிலே திருவவதாரஞ் செய்த . காலத்திற்கு முந்நூற்றாண்டுகளுக்கு முன்பு தொட்டு அக்காலம்வரையும் அந்நிய மன்னரது ஆட்சியுட்பட்டு வலியிழந்து கிடந்த தமிழ் நாடு அருட் செல்வராகிய அவ்விருவரது வருகையினாலே வலிபெற்றெழுந்த தன்றோ? அக்காலம் முதல் அறுநூற்றாண்டு களுக்குத் தமிழ் மக்கள் பெரும் புகழ்பெற்று விளங்கினாரன்றோ? ஈழத்தினும், காழ கத்தினும், கங்கைக் கரையினும் தமிழ் மன்னர் பெற்ற வெற்றி எங்கிருந்தெ ழுந்தது? தமிழ் மன்னரது வலிமைக்கு ஊற்று யாது? இத்தகைய வினாக்களை யாம் ஊன்றி ஆராய்வோமெனின், “நாமார்க்குங் குடியல்லோம்” என நாவரச ருரைத்த மகா மந்திரமே தமிழ் மன்னரது வலிமைக்குக் காரணமாயிற்று என அறிவோம். நாவரசர் தமிழ் நாட்டிலிருந்த அக்காலத்திலே மேற்குக் கடலுக்கு வட கோடியிற் கிடந்த அராபி நாட்டிலே, ஆண்ட வனுடைய திருத்தூதரொருவர் அவதரித் தார். அவர் போதித்த மார்க்கத்திலே “இறை வனொருவனே இறைவன்” என்னும் சிறந்த போதனை அமைந்துள்ளது. இப்போதனை யினால் வலிமை பெற்ற அந்நாட்டு மக்கள் ஐரோப்பாக் கண்டத்தின் பெரும் பாகத்தை யும் ஆசியாக் கண்டத்தின் ஒரு பாகத்தினை யும் அம்மாணையுள் வைத்து ஆட்சி புரிந்தனரன்றோ? அருண் ஞானத்தினா

லெய்தும் வலிமை யித்தகையதென வுணர்ந்தாம்; அதனை அடைதற்குரிய சாதனை இதுவென ஆராயப் புகுவாம்.

"சந்தமும் எனது செயல் நினது செயல், யானெனுனம் தன்மை நினையன்றி யில்லாத் தன்மையால் வேறலேன், வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே" என அருண் ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் கூறிய உறுதி மொழி அவ்வருண் ஞானத்தினைப் பெறுதற்குரிய சாதனையினை நமக்கு உணர்த்துகின்றது. "தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கின், நாதனவனுடலுயிரா யுண்டுறங்கி நடந்து, நானாபோகங்களையுங் தானாகச் செய்து, பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்" என்னும் உண்மைநெறி விளக்க மும் மேற்குறித்த சாதனையினையே விளக்கு கின்றது. "அவனிவனாய் நின்றமுறை யேகனாகி, யரன்பணியினின்றிடவு மகலுங் குற்றம்," என்னும் அருண்மொழியும் இவ் வுண்மையினை அறிவுறுத்துகின்றது. "தவ மொன்று மில்லையொரு சாதனையுமில்லை யடா, சிவமொன்றே யுள்ளதெனச் சிந்தை செய்தாற் போதுமடா," எனவும் 'சந்தமும் எங்கு மெல்லாந் தானாகி நின்ற சிவம், வந்தெனுளே பாயுதென்றுவாய் சொன்னாற் போதுமடா," எனவும், "சித்தசிவ வெள்ள மென்னுள் வீழ்ந்து நிரம்புதென்றுன், சித்த மிசைக் கொள்ளுஞ் சிரத்தையொன்றே போதுமடா" எனவும் அநுபவ ஞானியுங் கவி வாணருமாகிய பாரதியார் கூறுகின்றார்.

பண்டைப் பெருமையையிழந்து கிடந்த இப்பாரத நாடு இந்நாளிலும் விளக்கமுறும்படி உண்மை நெறியினை உலகிற்குணர்த்த திருவவதாரஞ் செய்த அருட்பெருங் குரவ ராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் உண்மைப் பக்தனது வாய்மொழியாக வெளியிட்டுரைத்த வாக்கியம் ஈண்டு நினைவு கூருதற்குரியது. அது வருமாறு : "தலைவ! அடியேன் ஓர் இயந்திரம்; நீர் அம்மனையில் தேவரீர் அடியேனை எவ்வாறு பேசுவிக்கின் றீரோ அவ்வாறு பேசுகிறேன்; எவ்வண்ணம் நடத்துகின்றீரோ, அவ்வண்ணம் நடக் கின்றேன்; எதனைச் செய்விக்கின்றீரோ அதனை யான் செய்கின்றேன்". இத்தகைய உணர்வு மேலிட்டுக் குறையிரந்து நிற்போ மெனின், அருளாகிய நம்மன்னை வெளிப் பட்டு நமது கரத்தினைப் பற்றி வழிநடத்தி நமக்கு வேண்டுவ புரிவாளென்பதற்கு ஐயப்பாடில்லை. "சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன், கண்ணினை நின் திருப்பாதப் போதுக்காக்கி, வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன், மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார, வந்தெனையாட் கொண் டுள்ளே புகுந்த விச்சை, மாலமுதப் பெருங் கடலே மலையே யுன்னைத் தந்தனை செந்தாமரைக்கா டனைய மேனித் தனிச்சுடரே யிரண்டுமிலித் தமியனேற்கே" என அறி வினாற் சிவனேயாகிய மணிவாசகப் பெருந்தகையார் கூறிய திருவாசகமும் அருண் ஞானத்தினைப் பெறுதற்குரிய சாதனையைக் குறித்து நிற்கின்றது.

அருள்வழி நின்று, இறைபணி புரி வோர்க்கு இவ்வுலகமே இன்பவுலகாகும். யாவனொருவன் அன்பு மேலீட்டினாலே தன்னை முற்றிலும் இறைபணிக்கு உரிமை யாக்குகின்றானோ அவனுடைய இதயம் இறைவனுக்கு உகந்த கோயிலாகின்றது. காதலெய்திய உலக மாந்தர் அக்காதல் வயத்தினால் அன்னையையும் அத்தனையும் உடன் பிறந்தாரையும் மறந்திருப்பதை யாங் கண்டிருக்கின்றோமல்லவா? அவ் வண்ணமே தனிப்பெருந் தலைவனாகிய


இறைவனுடைய பேரருளுக்கு இலக்காயி னோரும் உலகத்து மயலனைத்தினையும் மறந்து இடைவிடாது அவனருளிலே யீடுபட்டிருப்பர்; அரசனுழைச் சென்ற விருந்தினர் போலச் சொல்லுதற்கரிய உவகை மேவியிருப்பர். ஒரோவழி மணமகனது முன்னிலையில் இருக்கும் மணமகளைப் போல இவர் இன்பவெறி நிரம்பப் பெற்றவராகக் காணப்படுவார்; உலகத் துன்பங்களைக் கண்டு உளம் வருந்தி மக்கட் கூட்டமனைத்தினையும் உய்யக் கொள்ள வேண்டுமென இறைவனை வேண்டி நிற்பதும் இவர்க்கு இயல்பாகும். இவரது வேண்டுகோள் இறைவனது திருச்செவியினைச் சென்று சேரும்.

அன்புடையீர்! "அருள் ஞானம்" என்னும் அரும்பெரும் பொருளினைக் குறித்து ஒரு சில முடிபுகளை இப்பேரவை யிலெடுத்துக் கூறினேன். நான் வழுவிய விடத்தினை வழு நீக்கியும் குறைவுற்ற விடத்தினை நிறைவாக்கியும் இவ்வுரை யினை ஏற்றுக் கொள்வீர்களென்னுந் துணிவு எனக்கு உளது. "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம், காதல் சிறந்தது" உள்ளமானது எந்தத் தலைவனை நாடிற்றோ, அந்தத் தலைவனது தணிமை யிலிருக்கும் அருமை நோக்கியே தில்லைத் திருப்பதியிலே சில காலம் வசித்தேன். பின்பு ஈழத்திற்குப் போக நேர்ந்ததெனினும் "உடலங்கே, உயி ரிங்கே" என நின்றமையாற் போலும் இடையிடையே தாய் நாட்டினைத் தரிசிக்கும் பாக்கியத்தினை ஆண்டவன் கூட்டி வைக்கிறான். அவனது பேரருள் நம்மனைவருக்கும் என்றும் உளதாகுக.



அமெரிக்க வெள்ளை மாளிகையில் தீபாவளித் திருநாள் கொண்டாடப்பட்டது. அமெரிக்க அதிபர் ஒபாமா தீபம் ஏற்றுகிறார்.

# வாழ்த்துகின்றோம்



**30-10-2016இல் 77வது அகவையை நிறைவு செய்த**

**எமது தேவஸ்தான உபதலைவர்**

**தேசகீர்த்தி, லயன்**

## உயர்திரு. சரவணமுத்து ஆறுமுகநாதன்

**அவர்களை**

**துர்க்காதேவியின் திருவருட் துணைகொண்டு வாழ**

**பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.**

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
*தெல்லிப்பழை.*


# உருத்திரபுரம் குருகுல வரலாற்றாளர்கள்



மாதாஜி. (பரமானந்தவல்லி)
வடிவேல் சுவாமிகளுடன் அடியவர்கள்



உணவு தயாரிப்பில் உதவிடும் குருகுலப்பெண் பிள்ளைகள்



குருகுல பிள்ளைகளுடன் அப்புவும், அம்மாவும்.



இந்து மகாவித்தியாலய ஆசிரியரும், குருகுல ஆண் பிள்ளைகளின் பராமரிப்பாளருமான அமரர் சி. கனகநாயகம் ஆசிரியர் அவர்கள்.



பிரசங்கத்தில் வடிவேல் சுவாமிஜி அவர்கள்



வடிவேல் சுவாமிஜி அவர்கள் பிரசங்கம் செய்யும் பொழுது.

# கோயில்களும் பழந்தமிழர் பண்பாடும்

– டாக்டர் சி. செல்வராஜ்

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்மக்கள் ஓலை, களிமண் போன்ற பொருட்களால் கோயில் கட்டி இறைவனை வழிபட்டனர் என்று சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. ஆனா், கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பிறதே, என்றும் அழியாத கல் கொண்டு கோயில் கட்டும் பழக்கத்தைத் தமிழகத்தில் பல்லவர்கள் அறிமுகப்படுத்தி அதைச் சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள் போன்ற அரச வம்சத்தினர் விரிவுபடுத்திக் கையாண்டனர்.

இத்தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், தமிழகத்தில் மட்டுமல்லாமல், அவர்கள் படையெடுத்துச் சென்று வெற்றி கண்ட அண்டை நாடுகளிலும் கட்டடக் கலையின் நுணுக்கங்களுடன் கோயில் கட்டி இறைவனை வழிபட்டனர். இக்கோயில்கள் அக்காலத்தில் இறைவனை வழிபட மட்டும் பயன்படாமல், அக்கால அரசியல், சமுதாய, பொருளாதார மற்றும் பண்பாட்டின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன. ஆகவே, பழந்தமிழரின் பண்பாட்டில் கோயில்களின் பங்கைப்பற்றி ஆராய்வோம்.

## அரசியல்

பழந்தமிழ்நாட்டில் கோயில்கள் அக்கால அரசியலின் தலைமைச் செயலகம் போல் செயற்பட்டன. கோயில்களில் அரசன் தங்கியிருக்கவும், அவன் அமைச்சு நடத்த அவையும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அந்த அவையில் அரசன் அவ்வப்போது அமர்ந்து நாட்டு நிர்வாகங்களைக் கவனிப்பது வழக்கம். அக்கால அரசர்களுக்கு ஆலோசனை கூற ஐம்பெருங்குழு, எண் பேராயம் போன்ற குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இக்குழுக்கள் கோயில் வராந்தாவில் கூடி நாட்டில் உள்ள பிரச்சினைகளை விவாதம் செய்துதகுந்த ஆலோசனைகளை அரசனுக்கு வழங்கி வந்தன. இதுமட்டுமல்லாமல் அரசில் பல்வேறு நடவடிக்கைகள், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், பல்வேறு சலுகைகள் போன்றவைகளைக் கோவிலிலிருந்தே அரசன் அறிவித்தான்.

மேலும் அவ்வரசர்கள் வெளியிட்டுள்ள அரச ஆணைகள், கோயில் சுவர்களில் மக்களின் பார்வைக்கு வசதியாகச் செதுக்கிவைக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளைப் பழந்தமிழ் அரசர்கள் கட்டிய அனைத்துக் கோயில்களிலும் இன்றும் காணலாம்.

இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் சுவர்களில் அவ்வரசன் வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் செதுக்கி வைத்திருக்கும் பாங்கு, பார்ப்போரைக் களிப்புறச் செய்கிறது. மேலும் இக் கல்வெட்டுக்களைப் பழந்தமிழ் அரசர்கள் கட்டிய அனைத்துக் கோயில்களிலும் இன்றும் காணலாம்.

இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் சுவர்களில் அவ்வரசன் வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் செதுக்கி வைத்திருக்கும் பாங்கு, பார்ப்போரைக் களிப்புறச் செய்கிறது. மேலும் இக் கல்வெட்டுக்களில் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சிகள், வெளிநாட்டுப் படையெடுப்புகள், அவற்றின் வெற்றி தோல்விகள், போரின் முடிவில் கவரப்பட்ட செல்வங்கள், போரின் விளைவுகள் போன்றவற்றையும் பொறித்து வைத்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல், அரசனே அக்காலத்தில் தலைமை நீதிபதியாகவும், நீதி அரசனாகவும் செயற்பட்டான். கோவிலிலுள்ள அறையிலேயே நீதிமன்றம் அமைக்கப்பட்டு, ஆண்டவன் முன் குற்றவாளிகளை விசாரித்து, முறையான தண்டனைகள் வழங்கப்பட்டதாகப் பழந்தமிழ்க் கோயில் கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன. இவைகளைப் பார்க்கும்போது, அக்காலக் கோயில்கள் இறைவனை வழிபடமட்டும் பயன்படாமல் ஆட்சி செய்யும் அரசனின் தலைமைச் செயலகமாகவும், நீதி வழங்கும் நீதிமன்றமாகவும் செயல்பட்டன என்று நன்கு புலனாகிறது.

## பொருளாதாரம்

பழந்தமிழர்களின் ஆட்சிக் காலத்தில், ஆலயங்கள், ஆட்சி செய்யும் அரசனின் துணைக் கருவூலமாகச் செயற்பட்டன. அக்காலத்தில் மக்கள் கோயிலுக்குத் தானங்கள் செய்வதைப் பெரும் பேறாகவும், தாங்கள் செய்த பாவத்திலிருந்து விடுதலை கிடைக்க உதவும் என்றும், வீடு பேறு அடைய உதவும் என்றும் நம்பினார்கள்.

ஆகவே, அவ்வப்போது அரசர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும் கோயில்களுக்குத் தானமாக ஏராளமான நிலங்கள் மற்றும் பொன், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களைத் தானமாக வழங்கினர். இவ்வாறு தானமளிக்கப்பட்ட நிலங்களைக் கோயில் நிர்வாகிகள் குத்தகைக்கு விடுவதால் கிடைக்கும் வருமானம் போன்றவைகளால், கோயில்கள் பெரும் செல்வத்துடன் காணப்பட்டன.

வெளிநாட்டுடன் போரிட்டு வெற்றியுடன் திரும்பும் போது, தான் போரிட்ட நாட்டிலிருந்து ஏராளமான விலையுயர்ந்த பொருட்களைக் கவர்ந்து வருவதைப் பழந்தமிழர்கள் தம் மரபாகக் கடைப்பிடித்தனர். அப்பொருட்களைத் தமிழ் அரசர்கள் தாம் கட்டிய கோயில்களில் சேமித்து வைத்துப் பாதுகாத்தனர். மேலும் அப்படி கோயிலில் வைக்கப்படும் அப்பொருட்கள் எல்லாம் அக்கோயிலுக்கே கொடுக்கப்பட்டன. அவற்றின் பெயர், எடை போன்றவைகளைப் பட்டியல் போட்டு அரசன் தன் கையில் வைத்துக் கொண்டான்.

உதாரணமாக முதலாம் இராஜராஜ சோழன் – தான் சேர, பாண்டிய, சாளுக்கிய நாட்டின் மீது போரிட்டு வெற்றியுடன் திரும்பும்போது கொண்டு வந்த பொருட்களை எல்லாம்,

தான் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவூலத்தில் வைத்துப் பாதுகாத்ததாக அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. கல்வெட்டின் கூற்றுப்படி ஆராளமான அளவு தங்கம், தங்க ஆபரணங்கள், தங்க மலர்கள், முத்து, பவளம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் உட்பட ஏராளமான பொருட்கள் கொடையளிக்கப்பட்டுள்ளன. இதைப்போல் முதலாம் இராஜேந்திரசோழன் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியபோது ஒரு கட்டு தங்க மலர்களைக் கொண்டு வந்து தஞ்சைப் பெரிய கோயிலுக்குத் தானமாகக் கொடுத்துள்ளான். இதேபோல் இவ்வரசன் கடாரத்தின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியபோது, அங்கிருந்து கொள்ளையடித்துக் கொண்டு வந்த செல்வங்களைத்தான் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்துள்ளான்.

## வீடுபேறு கிட்டும்

அவ்வாறே, தமிழ் அரசர்கள் தாங்கள் போரில் வெற்றியடைந்து தாய்நாடு திரும்பியதும், வெற்றிக்கு உதவிய இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் முறையாகத் தாம் கொண்டுவந்த பொருட்களைத் துலாபாரம் (தனது எடைக்கு நிகராகப் பொன் நிறுத்துக் கொடுத்தல்) செய்து கோயிலுக்குத் தானமாகச் செய்து கொடுத்தனர். இவ்வாறு செய்தால் தங்கள் எதிரி நாட்டில் போரிடும்போது கொல்லப்பட்ட ஏராளமான வீரர்கள் மற்றும் யானை, குதிரை போன்ற விலங்குகளிலிருந்தும் தனக்குப் பாவமன்னிப்புக் கிடைக்கும் என்றும், வீடு பேறு அடைய உதவும் என்றும் நம்பினர்.

உதாரணமாக முதலாம் இராஜேந்திரன் வடநாட்டின் மீது படையெடுத்துத் திரும்பி வந்ததும், தஞ்சைப் பெரிய கோயிலுக்குத் துலாபாரம் செய்து கொடுத்தான் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. இதைப்போல் பாண்டிய நாட்டிலும் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் தான் ஹொய்சள நாட்டின்மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியதும், சிதம்பரம் மற்றும் ஸ்ரீரங்கம் சிவன் கோயிலுக்கத் துலாபாரம் செய்து கொடுத்ததாக அக்கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. மேலும் சோழ அரசர்கள் சில சமயங்களில் தாங்கள் இவ்வாறு கொண்டுவந்த செல்வத்தினால் சிதம்பரம் நடராசர் கோயிலுக்குத் தங்கத்தால் கூரை வேய்ந்தனர் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வாறு பழந்தமிழ் அரசர்கள் தாங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட செல்வத்தில் பெரும்பகுதி கோயிலுக்குப் பல வழிகளில் போய்ச் சேர்ந்ததால், அக்காலக் கோயில்கள் மிகவும் செல்வத்துடன் காணப்பட்டன. இச்செல்வம் நாட்டின் செல்வமாகவும் அரசனின் ஒரு துணைக் கருவூலமாகவும் செயல்பட்டது. அச்செல்வத்தைக் கொண்டு அரசன் பல சமுதாய மற்றும் பண்பாட்டுப் பணிகளைச் செய்தான்.

மேலும், கோயில்களுக்கு அரசன் முதல் சாதாரண ஏழை வரை – தானமாக நிலங்களும், பொன்னும், பொருளும் வாரி வழங்குவதால் அக்காலக் கோயில்கள் பெரும் செல்வச் செழிப்புடன் காணப்பட்டன. இந்தக் கோயில் நிலங்களைப்

பராமரிக்கவும், விவசாயம் செய்யவும், கோயிலைச் சுத்தம் செய்யவும், கோயிலுக்கு வேண்டிய பொருட்களைப் படைக்கவும், மற்றும் பணிவிடை செய்யவும் ஏராளமானவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். இவர்கள் காலை முதல் மாலை வரை கோயில் நிலத்தில் உழைத்து, கோயில் வருமானத்தில் ஊதியமும் பெற்றனர். ஆகையால் கோயில்கள் அக்காலத்தில் பலரை ஆண்டு முழுவதும் வேலையில் அமர்த்தும் அமைப்பாகவே செயல்பட்டது.

பழந்தமிழர்கள் கல்வியின் சிறப்பினை நன்கு உணர்ந்திருந்தனர். எனவே பல கல்விக் கூடங்களை ஏற்படுத்திப் படிக்க வசதிகள் பல செய்து கொடுத்தனர். அவைகள் கட்டிகா, மதா, சாலை என்று அழைக்கப்பட்டு கோயில்களுடனே செயல்பட்டன. இவைகளை நிர்வகிக்க ஆகும் செலவு மற்றும் பராமரிப்பு எல்லாவற்றையும் கோயில்களே ஏற்றிருந்தன. இக்கல்லூரிகளில் வடமொழியில் பயிற்றுவிக்கப்பட்டு, மதம், விஞ்ஞானம், வானவியல், சோதிடவியல் போன்றவைகள் போதிக்கப்பட்டன.

உதாரணமாக – கும்பகோணம் இராஜேஸ்வர சுவாமி கோயிலில் பரகேசரிவர்மன் என்கிற அரசன் கி.பி. 95இல் கல்வி பயிற்றுவிக்கக் கல்விச்சாலை ஒன்றைக் கட்டி, கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்ததாக அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இதேபோல் எண்ணாயிரம் என்னும் ஊரில் உள்ள சிவன் கோயிலில் மிகப்பெரிய வேதக் கல்லூரியொன்றும் செயல்பட்டதாகச் சொல்லப்படுகிறது; இதைக் குறிக்கும் கல்வெட்டில் ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களின் பராமரிப்புப் போன்ற விவரங்கள் யாவும் தெளிவாக உள்ளன.

அக்காலக் கோயில்களில் தொழில் கல்விக்கெனத் தனிப்பட்ட கல்லூரிகள் செயல்பட்டதாகக் காண்கிறோம். வீர இராஜேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டு, அவ்வூர் சிவன் கோயிலில் மருத்துவக் கல்லூரி ஒன்று செயற்பட்டதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டின் கூற்றுப்படி அதில் சுமார் 340 மாணவர்கள் பயின்றதாகவும் அவர்களுக்கு நிதி உதவி, இலவச உணவு, உடை போன்றவைகள் அளிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், இம்மாணவர்களின் சோதனைப் பயிற்சிக்கு வேண்டி ஒரு பெரிய மருத்துவமனை அக்கோயிலோடு இணைந்து செயற்பட்டதாகவும் இதற்குத் தேவையான மருத்துவ வசதிகள் இருந்ததாகவும் செவிலியர் மற்றும் உதவியார் போன்றவர்கள் அங்கே வேலை செய்ததாகவும் அவர்களின் மாதச் சம்பளம், சலுகைகள் போன்ற விவரங்கள் அனைத்தும் அக்கோயில் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன.

இவைகளைப் போன்று திருவொற்றியூர், திருத்தணி, திருவெறும்பூர் போன்ற ஊர்களில் அமைந்துள்ள கோயில்களிலும், கல்விச் சாலைகள் செயல்பட்டதாக அந்த ஊர் கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன.

### கலை வளர்ச்சி

பழந்தமிழரின் கோயில்கள் கலைகளின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன. இவர்கள் கட்டிய கோயில்கள் திராவிடர் கோயில் கட்டடக் கலையின் சின்னங்களாகத் திகழ்கின்றன. இக்கோயில்கள் கம்பீரமான தோற்றம், உயரமான கோபுரம், அர்த்த மண்டபம், முகமண்டபம் போன்ற பல பிரிவுகளைக் கொண்டவை. கோயிலைச் சுற்றிலும் மதில் சுவர்கள் கட்டப்பட்டிருக்கும்.

முதலாம் இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் தென்னிந்தியக் கட்டிடக் கலையின் சின்னமாய்த் திகழ்கிறது. மேலும் இக் கோயில்களில் சிற்பக் கலைகள் சிறந்து விளங்குகின்றன. வெண்கலம், செம்பு, வெள்ளி, கல், தங்கம் ஆகியவற்றில் சிற்பிகள் தங்களது திறனை வெளிப்படுத்தி மிகச் சிறந்த சிற்பங்களை அமைத்துள்ளனர். இச் சிற்பங்களில் இறைவனின் திருவுருவங்கள் பல்வேறு கோணங்களில் அழகுடனும் உயிரோட்டத்துடனும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சோழர்கள் தம் கோயில்களின் கருவறைச் சுவர்களில் அழகான ஓவியங்கள் தீட்டி தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த ஓவியங்கள் இராமாயணம் மகாபாரதம் போன்றவற்றின் செய்தியை சித்திரிப்பவைகளாய் உள்ளன. தஞ்சை, திருமயம், மாமண்டூர், நார்த்தாமலை, சித்தன்னவாசல், மலையப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள சோழர் ஓவியங்கள் இன்றும் காண்பதற்கு வியப்பாக உள்ளன. இவைகளின் மூலம் அக்காலத் தமிழ் மக்களின் பண்பாடு, நடை, உடை பாவனைகள், அணிகலன்கள், தலை அலங்காரம், சமயம், வாழ்க்கை முறை முதலியவற்றை அறியமுடிகிறது.

### எங்கும் இசை

சோழ அரசர்கள் இசையைப் போற்றி வளர்த்தனர். கோயில்களில் முக்கியமான விழாக்கள் நடைபெறும்போது இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன. சோழர் காலத்திய இசைக் கருவிகள், நரம்புக் கருவிகள், தோல் கருவிகள் போன்ற பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்பட்டன. தமிழர் கோயில்கள் இசையின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. கோயில்களில் இசை வல்லுநர்கள் பரம்பரை பரம்பரையாகப் பணியில் அமர்த்தப்பட்டனர். அவர்கள் யாகங்கள் செய்யும்போதும், விழாக்களின்போதும் பல்வேறு இசைக்கருவிகளை இசைத்து விழாவினைச் சிறப்புறச் செய்தனர்.

### கூத்துக்களின் வகைகள்

தமிழகத்தில் சங்க காலம் முதலாகவே – அதாவது தொன்று தொட்டே இக்கலை சிறந்து விளங்குகிறது. சிலப்பதிகாரம் 11 வகைக் கூத்துக்களைக் கூறுகிறது. சோழர்கள் காலத்தில் தேவரடியார் என்னும் சிறப்புமிக்க பெண்கள் இறைவனுக்குத் தொண்டு செய்ய அர்ப்பணிக்கப்பட்டனர். இவர்கள் ஆடல், பாடல் மற்றும் ஏனைய கலைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் கோயில்களில் தங்கியிருந்து அவ்வப்போது ஆடல், பாடல் போன்ற கலைகளைச் செய்து காட்டினர். சோழ அரசர்கள், குறிப்பாக முதலாம்

இராஜராஜ சோழன் அரியணை ஏறியபோது இக்கலைக்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டது. அவன் தனது போர் வெற்றியின் சிறப்பினைப் பாராட்டும் வண்ணம், தஞ்சையில் பிரகதீஸ்வரர் கோயில் கட்டி சுமார் 400 தேவரடியார்களைக் கொண்டு வந்து சேர்த்து, அக்கலைக்குப் பெரிதும் மெருகூட்டினான்.

இதேபோல் திருவாரூர் தியாகராசர் கோயில் திருவானைக்கா கோயில் போன்றவைகளில் தேவரடியார்கள் ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கி அக்கலையைச் சிறப்பித்தமையை அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. பரவை நாச்சியார், நங்கை பரவை போன்ற தலைசிறந்த கலைஞர்கள் இக்கலையில் சிறந்து விளங்கியதாகச் சோழர்காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்கள் காலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து, தரையைப் பெருக்கி, விளக்கேற்றி இறைவனை வணங்கினர். இக்கலை, சங்க காலத்தில் தமிழகத்தில் அறிமுகமாகி சோழர், பாண்டியர் காலத்தில் சிறப்புற்று பின்னர் அண்டை நாடுகளிலும் பரவியது.

## ஒருமைப்பட்டின் சின்னம்

பழந்தமிழர்களின் கோயில்கள் நாட்டின் ஒருமைப்பாட்டுச் சின்னமாய் விளங்கின.. இக்கோயில்களில் அவ்வப்போது விழாக்களும், கூத்துகளும், ஆராதனைகளும் நடைபெறுவதால் உள்ளது. இவைகளில் மக்கள் சாதி, மத, எல்லைகளைக் கடந்து பங்கேற்று இறைவனை வழிபடல் மட்டுமல்லாமல், பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தனர். மக்கள் தாங்கள் வேறுபாடுகளை மறந்து, ஒரே இடத்தில் அவ்வப்போது கூடி ஆண்டவனை வழிபட்டதாலும் – கலை நிகழ்ச்சிகளை ரசித்ததாலும் ஒருவகை சகோதர மனப்பான்மை வளரக் கோயில்கள் பெரிதும் உதவின.

மேற்கூறிய கருத்துக்களை ஆராயும்போது கோயில்கள் பழந்தமிழ் மக்களின் வாழ்வில் பெரும்பங்கு பெற்றிருந்தமை தெரிகிறது. இவைகள் அரசியல், பொருளாதார, சமூக மற்றும், பண்பாட்டின் உறைவிடமாகவும் பலதரப்பட்ட மக்களை அணைக்கும் ஒருவகைப் பாலமாகவும் செயல்பட்டன என்பது உண்மை.

தற்போது இக்கோயில்கள் பல தன் பழைய செல்வாக்கினை இழந்து, ஆதரிப்பாரின்றிப் பொலிவிழந்து காணப்படுகின்றன. தமிழகத்தின் பாரம்பரியத்தையும், அதன் புனிதப் பண்பாட்டையும் பேணிக்காக்க எண்ணும் ஒவ்வொருவரும் இச்செல்வங்களை அழியாது பேணிக்காப்பது தலையாய கடமையாகும்.

# மறக்கமுடியாத அதிபர்
# அமரர் தெ.து. ஜயரத்தினம் அவர்கள்

**திரு. வே. தனபாலசிங்கம் அவர்கள்**

ஆண்டுதோறும் ஒக்டோபர் 29ம் நாள் திரு.தெ.து. ஜயரத்தினம் அவர்களின் நினைவுநாள். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பொற்காலம் 1945 – 1970.

அன்றைய காலத்தைச் சிறிது நினைவிற் கொள்வோம். பாவலர் துரையப்பா பிள்ளை அவர்கள் 1910ல் ஆரம்பித்த மகாஜன உயர்நிலைப்பள்ளியில் அவரது மகன் 1932இல் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். 1943ல் B.A. பட்டதாரியானார். 1945ல் அதிபர் பதவியை ஏற்றார். நானூறு மாணவர்கள் பதினைந்து ஆசிரியர்கள். மகாஜனக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1946ல் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. பாடசாலை விளை யாட்டுச்சங்க உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கல்லூரி முதல் முறையாகக் கலந்து கொண்டது. பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை நிறுவப்பட்டது. பௌதிகம், இரசாயனம், உயிரியல் கற்பிக்க வசதிகள் செய்யப்பட்டன. 1947ல் சரஸ்வதி வித்தியாலயம் மகாஜனாவுடன் இணைக்கப்பட்டது. கல்லூரி இரண்டாம் தரத்திற்கு உயர்ந்தது.

விஞ்ஞான ஆசிரியர்களை இந்தியாவிலிருந்து அழைத்து வந்தார். அவர்கள் அறிவியல் கல்வியை வளர்த்தனர். 1948ல் H.S.C வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1949ல் மகாஜனா முதலாந்தர (Grade 1) கல்லூரியாகத் தரம் உயர்ந்தது. 1950ல் கல்லூரி வளர்ச்சிக்கு நிதி திரட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. 1951ல் கல்லூரிக் கீதமும் கொடிக் கவியும் அமைக்கப்பட்டது. விளையாட்டு மைதானம் பெரிதாகியது. 1954ல் மாணவர் விடுதிச்சாலை அமைக்கப்பட்டது. 1952ல் பௌதிக ஆய்வுகூடம் அமைக்கப்பட்டது. மரவேலை, வனைதல், தும்புத்தொழிற்சாலை, நெசவு ஆகிய தொழில் பாடங்களுக்கு கூடம் அமைக்கப்பட்டது.

1960ல் கல்லூரி பொன்விழாக் கண்டது. நினைவுக்கட்டடம், துரையப்பா மண்டபம், சேர். நிக்கிளஸ் ஆட்டியகல அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பாவலரின் இலக்கியப் படைப்புக்களைத் தொகுத்து சிந்தனைச் சோலை என்ற பெயருடன் வெளியிடப்பட்டது. 1960இல் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்று, கல்விப்பணியாளரின் முகாமைக்குள் மகாஜனா வந்தது. ஆனால் அதிபர் முன்பு போலவே கல்லூரியின் உயர்ச்சியில் கண்ணும் கருத்துமாகத் திகழ்ந்தார். நடராசா ஆலயம் அமைக்கப்பட்டது.

1961ல் மகாஜனா அதி உயர்தர (Super Grade) கல்லூரியாகத் தரம் உயர்ந்தது. 1963ல் 38 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் பத்துப்பேர் மருத்துவத்துறை. அன்று யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குள் மகாஜனா முதன்மை பெற்றது.

1965ல் இலங்கைக் கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் முதலிடம்

பெற்றுத் தொடந்து ஐந்து ஆண்டுகள் முதலிடத்தைப் பெற்றது மகாஜனா. 1967ல் முதலாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட வெற்றி வீரர்களாக மகாஜனா சிறப்புப் பெற்றது. தொடர்ந்து எட்டு ஆண்டுகள் முதலிடம் பெற்றது. 1970ல் கல்லூரி வைரவிழாக் கண்டது. மாணவர் தொகை 1800. ஆசிரியர் தொகை 64.

இப்படியாக மகாஜனக் கல்லூரி வளர்ந்து உயர்ந்தமைக்கு மகாஜன சிற்பி என்று அழைக்கப்படும் தெது. ஜயரத்தினம் ஐயா அவர்களின் நிர்வாகத் திறமையே. அதிபர் அவர்கள் பிறக்கும்பொழுதே ஆசிரியராகப் பிறந்தவர். ஆளுமைத் திறமும் கூடவே பிறந்தது. இவர் கால உப அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் யாவரும் "செய்யுந் தொழிலே தெய்வம்" என்ற நிலையில் கடமை செய்தனர். பெரிய கல்லூரிகளை நடத்தக்கூடிய அதிபர்களும் தலைமையாசிரியர்களும் இங்கே ஆசிரியர்களாகப் பணியாற்றினர். சர்வகலாசாலையில் கடமையாற்றக்கூடிய விரிவுரையாளர்கள் சிலர் இங்கே கடமையாற்றினர். சகலகலாவல்லுநர்கள் இங்கே இருந்து பணி செய்தனர். ஆற்றல் மிக்க அதிபரின் சிந்தனை முழுவதும் மகாஜனவின் வளர்ச்சி பற்றியதே. மாணவர் பூரண மனிதராக வரவேண்டும் என்ற அதிபரின் நோக்கம் நிறைவேற்றக்கூடிய நல் ஆசிரியர்கள் அன்று கடமையாற்றினர்.

எனவே அதிபரின் காலம் பொற்காலமாகப் பிரகாசித்தது. மீண்டும் பொற்காலம் ஏற்பட முயற்சிப்போமாக.

# இதய அஞ்சலி



## சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள்

**( பிரதமகுரு - வில்லூன்றி கந்தசுவாமி கோவில்,**
**சமஸ்கிருத ஆசிரியர் - விபுலானந்தக் கல்லூரி, குருகுல அதிபர் )**

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
*தெல்லிப்பழை.*

# கந்தசஷ்டி விரதம், மகிமைகள்

கந்த சஷ்டி விரதம், தீபாவளி அமாவாசை முடிந்து முதல் நாள் தொடங்கி ஆறு நாட்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆறாம் நாள் சூரனுக்கு அருளல். கருணை கூர் முகங்கள் ஆறும். கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய! கந்தசஷ்டி என்பது முருகக் கடவுள் சூரனை அழித்த பெருமையை சவை சமயத்தவர்கள் கொண்டாடும் ஒரு விழாவாகும். சஷ்டி என்றால் ஆறு ஆகும். ஐப்பசி மாதம் சுக்கிலபட்ச பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்களும் கந்தசஷ்டி காலமாகும். இந்த ஆறு நாளையும் சைவர்கள் விரத நாட்களாக அனுட்டிக்கின்றனர். செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப்பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனை குலதெய்வமாகவோ, இஷ்ட தெய்வமாகவோ வழிபடுவோரும் பிறரும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பர். இந்த ஆறு நாட்களும் சைவர்கள் விரதமிருந்து அதிகாலையில் எழுந்து நீராடி பூரண கும்பம் வைத்து விளக்கேற்றி பூசை வழிபாடு செய்வர்.

அகரமும் ஆகி அதிபனும் ஆகி அதிகமும் ஆகி அகமாகி
அயன் எனவாகி அரி எனவாகி அரன் எனவாகி அவர் மேலாய்
இகரமும் ஆகி எவைகளும் ஆகி இனிமையும் ஆகி வருவோனே
இருநிலம் மீதில் எளியனும் வாழ எனது முன் ஓடி வரவேணும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ் களி கூரும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூஜை மகிழ் கதிர்காமம் உடையோனே
சககெனசேகு தகுதிமித்தோதி திமியென ஆடும் மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலை மிசை மேவு பெருமாளே!

தீவிர முருக பக்தர்கள் இவ்விரதத்தை ஒரு கடுந் தவமாகக் கருதி, ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். அமாவாசைத் தினத்தில் ஒரு வேளை உணவு உண்பர். இவ்விரத முறைமையை அனுசரிக்க இயலாதவர்களாக ஐந்து தினங்கள் ஒருவேளை பால், பழம் மட்டும் அருந்தி, ஆறாம் நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது. ஏழாம் நாள் பாரணை அருந்தி விரதத்தை நிறைவேற்றுவர்.

தொடக்க தினத்தில் ஆலயத்தில் தர்ப்பையணிந்து, காப்புக்கட்டல் அதாவது சங்கற்பம் செய்தல் வழக்கம். பக்தர்கள் ஆறு தினங்களும் முருகன் ஆலயத்தில் இறைவழிபாடு, புராணபடனம் போன்ற புனிதச் செயல்களில் ஈடுபடுவர். இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூஜை முடிந்ததும் மகேஸ்வர பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்யலாம். மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை (உலோபம்), மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து, அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள்பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்தசஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள் ஆகும்.

முருகப் பெருமான் சூரசங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட்செயலைக் குறிக்கும் இவ்விழாவின் ஆறாம் நாள் முரகன் ஆலயங்களில் 'சூரன் போர்' என்னும் சமய நிழக்வு நாடக பாணியில் நடைபெறுவது வழக்கம். சூரசம்காரத்தின் முடிவில் முருகன் மா மரமாக நின்ற சூரனை தன் சக்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவலும் மயிலுமாக மாறவும், சேவலை கொடியாகவும் மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக் கொண்டார். இது கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். கந்தபுராணத்தில் வரும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோர் முறையே சைவசித்தாந்தத்தில் பேசப்படும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. ஆன்மாவைத் துன்புறுத்தும் மலங்களின் கெடுபிடியிலிருந்து ஆன்மாவுக்கு விடுதலை அளிப்பதோடு, ஆணவ மலத்தின் பலத்தைக் குறைத்து அதனைத் தன் காலடியில் இறைவன் வைத்திருப்பதை உணர்த்துவதே சூரசங்காரமாகும். ஆறுபடை வீடுகளிலும் அனைத்து முருகன் கோவில்களிலும் இந்த ஆறு நாட்களிலும் சிறப்பான பூசைகள் நடைபெறும். ஆறு நாட்கள் தொடர்ந்து விரதமிருப்பவர்களும் இருக்கமுடியாமற் போனவர்களும் கூட மாதந்தோறும் வரும் சுக்கிலபட்சத்து சஷ்டியில் முருகப்பெருமானை வழிபட்டு விரதம் மேற்கொள்ளலாம்.

பொன்னழகு மின்னிவரும் வண்ணமயில் கந்தா
கண்மலரில் தன்னருளைக் காட்டிவரும் கந்தா
நம்பியவர் வந்தால் நெஞ்சுருகி நின்றால்
கந்தா முருகா வருவாய் அருள்வாய்........ முருகா!

## மும்மலங்களை அழித்த முருகப்பெருமானின் விரதம்

கந்தப் பெருமான் சூரனைச் சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவது ஸ்கந்தசஷ்டி விரத விழாவாகும். முருகன் கோயில் கொண்டுள்ள எல்லா ஆலயங்களிலுமே ஸ்கந்தசஷ்டி விரதம் மிகச் சிறப்பாக 6 நாட்கள் அனுட்டிக்கப்படுகின்றது. ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறை சஷ்டியன்றுதான் முருகப் பெருமான் சூரபத்மனை அழித்த நாள்.

## கந்தவிரத மகிமை

முழுமுதற் கடவுளாக கலியுகக் கந்தப்பெருமான் போற்றப்படுகின்றார். மனித மனம் விரதத்தின்போது தனித்து விழித்து, பசித்து, இருந்து 6 வகை அசுத்தங்களையும் அகற்றி தூய்மையையடைகிறது. தூய உள்ளம், களங்கமற்ற அன்பு, கனிவான உறவு என்பவற்றுக்கு அத்திவாரமாக 'கந்தசஷ்டி' விரதம் அமைகிறது. கொடுங்கோலாட்சி செலுத்திய ஆணவத்தின் வடிவமாகிய சூரனையும் கன்மத்தின் வடிவமாகிய சிங்கனையும் மாயமலத்தின் வடிவமாகிய தாரகனையும் அசுரசக்திகளையெல்லாம் கலியுக வரதனான பெருமான் அழித்து நீங்காத சக்தியை நிலைநாட்டிய உன்னத நாளே கந்தசஷ்டி நாளாகும்.

## கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் முறை

ஐப்பசித் திங்கள் சதுர்த்தசித் திதியில் வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி வரை 6 நாட்களும் கந்தப் பெருமானை நினைத்து, வழிபட்டு விரதமனுஷ்டிக்கப்படுகிறது. விரத்திற்கு முதல் நாள் அன்றே வீட்டினைக் கழுவு சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் தெளித்தல் அவசியம். விரதநாளன்று அதிகாலையில் துயிலெழுந்து நீராடி தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து காலையும் மாலையும் வீட்டின் சுவாமியறையில் விளக்கேற்றி, விபூதி பூசி தேவாரங்கள் பாடுதல் வேண்டும். அத்துடன் கோயில் வழிபாடு செய்தல் மிகவும் நன்று.

கேதாரகௌரி விரதம் பூர்த்தி செய்து கந்தசஷ்டி விரதம் பிடிப்போர் காலையில் நீராடி பூசை முடித்துத் தீர்த்தத்தை உட்கொண்டு அதன்பின் கந்தசஷ்டி விரதத்தைக் கடைப்பிடிக்கவும்.

ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும் இவ்விரதத்தை தம் உடல் நிலைக்குத் தக்கமாக கடைப்பிடிக்கவேண்டும். சிலர் 6 நாட்களும் எவ்வித அன்ன ஆகாரம் இன்றியும், சிலர் பானம் மட்டும் அருந்தியும், பலர் முதல் 5 நாட்களும் ஒரு நேர உணவு உண்டு (பாலும் பழமும்) கடைசி நாளான 6ம் நாள் முழு உபவாசத்துடன் நித்திரை விழித்திருந்தும் ஏழாம் நாள் காலை முருகனை வழிபட்டபின் பாரணை மூலம் விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

## கந்தசஷ்டி விரதத்தில் படிக்கவேண்டியவை

இவ்விரதத்தின்போது தினமும் கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், கச்சியப்ப சுவாமிகளின் கந்தபுராணம் ஆகியவற்றைப் படித்தால் என்னவென்று சொல்லமுடியாத மன அமைதி நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர்.

ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்பமான தினத்தில் ஆலயம் சென்று சங்கற்பம் செய்து காப்புக்காட்டி விரதத்தைத் தொடங்குவார்கள். முருகனுடைய விரதங்களுள் கந்தசஷ்டி விரதம், கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம் ஆகிய மூன்றும் பிரதானமானவையாகும். கந்தசஷ்டி விரதம் தொடர்ந்து 6 வருடங்களும் கார்த்திகை விரதம் 12 வருடங்களும், வெள்ளிக்கிழமை விரதம் 3 வருடங்களும் அனுட்டிக்கப்படுகிறது. அசுர சக்திகளின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை மட்டுமன்றி ஆறுவகை எதிரிகளான காமம், கோபம், பேராசை, செருக்கு, மயக்கம், பெருமை ஆகிய வகைகளை அழித்து முற்றுணர்வு வரம்பிலாற்றல், தன்வயமுடமை, வரம்பின்மை, இயற்கையுணர்வு, பேரருள் ஆகிய தேவ குணங்களை நிலைநாட்டியதால் கந்தசஷ்டி பெருவிழாவாக எடுக்கப்படுகின்றது. ஏனைய விரத அனுட்டானங்களைப் போலன்றி கந்தசஷ்டி விரத அனுஷ்டானத்தைப் பெருவாரியான ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும்

கடைப்பிடிக்கின்றார்கள். மாணவர்கள் படிப்பிற்கும் குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்கும் கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழ்க்கைத் துணையாக அடையவேண்டியும் குழந்தையில்லாதோர் குழந்தை வேண்டியும் இவ்விரதத்தை அனுட்டிக்கின்றனர். ஞானசக்திக்கும் அசுர சக்திக்குமிடையே ஏற்பட்ட போர் சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்கள் நெடுங்காலமாக தேவர், மனிதர் யாவரையும் துன்புறுத்தியழித்து வந்தனர். பரமசிவன் இதற்கொரு முடிவு காணும் நோக்கில் தனது சக்தியையே முருகப் பெருமானாகப் பிறப்பித்தார். அந்த முருகப் பெருமான் இந்தச் சூரபதுமாதி அசுரர்களுடன் ஆறு நாட்கள் போரிட்டு வென்றார். இந்த அருட்பெருங் கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதல் 6 நாட்களையும் விரதநாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர். இதுவே கந்தசஷ்டி என்ற பேரில் பூலோகமாந்தரும் அனுஷ்டிக்கக் கிடைத்தது. கந்தபுராணக் கதையை சங்கரன்பிள்ளை சட்டியிலே மாவறுத்தார் என்ற சொற்றொடர் மூலம் நகைச்சுவையார் வழங்குவர். சங்கரன் புதல்வராகிய முருகப்பெருமான் சஷ்டித் திதியிலே மாமரமாக வந்த சூரனைக் கடிந்தார் என்பது இதன் பொருள். வெறும் கதை சொல்லும் புராணமாகக் கந்தபுராணத்தை எண்ணமுடியாது. சைவசித்தாந்த பேருண்மைகளை உருவகப்படுத்திக் கதை வடிவில் சுவைபடத் தரும் அருமையான நூல் இதுவாகும்.

அசுர சக்திகளின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை மட்டுமன்றி ஆறுவகை ஆறு உட்பகைகள் : அவா, கோபம், மயக்கம், கஞ்சத்தனம், செருக்கு, பொறாமை (காமம், குரோதம், உலோபம், மோகம், மாற்சரியம் அழித்து முற்றுணர்வு, வரம்பிலாற்றல், தன்வயமுடைமை, வரம்பின்மை, இயற்கையுணர்வு, பேரருள் ஆகிய தேவ குணங்களை நிலைநாட்டியதால் கந்தசஷ்டி விரதமே பெருவிழாவாக எடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் சுக்கில பட்சத்துப் பிரதமை முதல் சஷ்டி வரையிலான ஆறு நாட்களில் முருகன் பக்தர்கள் கந்தசஷ்டி விரதத்தை கடைப்பிடிக்க வேண்டும். முருகன் கோயில் உள்ள எல்லா இடங்களிலும் கந்தசஷ்டி விரதம் ஒரு பெருவிழாவாக நடக்கும். ஆறுபடை வீடுகளான திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலையிலும், இலங்கையில் நல்லூர், சந்நிதி, கதிரமலை (கதிர்காமம்), மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்களிலும் மிகவும் சிறப்பாக இவ்விழா நடைபெற்று வருகின்றது.

## கந்தசஷ்டி விரதத்தின் பலன்

குடும்பத்தில் துன்பங்கள் நீங்கவும், வேலைவாய்ப்பு, கடன் தொல்லை நீங்கவும் இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பது நன்று. "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என்பது பழமொழி. இதன் உண்மையான பொருள், சஷ்டியில் விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை உண்டாகும் என்பதாகும். எனவே குழந்தை வரம் வேண்டும் பெண்களுக்கு இது மிகவும் சிறந்த விரதமாகும். சுருக்கமாகச் சொன்னால் இவ் விரதத்தை கடைப்பிடித்து விரும்பிய பலனைப் பெறலாம்.

முருகன் அருள்வேண்டி பக்தர்கள் இருக்கும் விரதங்களுள் மிகச் சிறப்புடையது சஷ்டி விரதம். இந்த விரதத்தை மனதில் கொண்டே “சஷ்டியிலிருந்தால் அகப்பையில் வரும்” என்ற பழமொழி எழுந்தது. சஷ்டி விரதம் இருந்தால் நல்ல குழந்தை பேறு கிடைக்கும் என்பது பொருள். சஷ்டி விரதம் இருந்தால் நம் உள்ளத்தில் இறைவன் குடி கொள்வான் என்ற பொருளும் உண்டு.

கந்தசஷ்டியாகிய ஐப்பசி மாத சுக்கில பட்ச சஷ்டி முதல் அந்த ஆண்டு முழுவதும் வரும் 24 சஷ்டிகளிலும் இவ்விரதம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கந்தசஷ்டி தினத்துக்கு முன் வரும் பிரதமை முதல் ஆறு நாட்களும் உமிழ்நீரும் உள்ளே விழுங்காதவாறு நோன்பிருந்து இவ்விரதத்தை இருப்பது ஒருமுறை.

அவ்வாறு இயலாதவர்கள் அந்நாட்களில் ஒருமுறை வீதம் ஆறு மிளகையும் ஆறு கை நீரையும் அருந்தலாம். உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் இது. எனவே உப்பு நீர், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு இளநீர் முதலியவற்றை கந்தசஷ்டி விரதம் இருப்பவர்கள் அருந்தக்கூடாது.

விரத நாட்களில் அதிகாலையில் எழுந்திருந்து, நாட்கடன்களை முடித்து, திருநீறணிந்து முருகவேளைத் தியானித்துப் பின் நீராடி, தோய்த்துலர்ந்த இரு ஆடைகளை அணிந்து, தம்பத்திலும், விம்பத்திலும், கும்பத்திலும் முருகவேளை வழிபட்டு இரவில் நெய்யில் சமைத்த மோதகத்தை நிவேதித்துப் பூசிக்க வேண்டும்.

ஏழாம் நாள் காலை விதிப்படிப் பூசித்துக் கந்தன் அடியார்களுடன் அமர்ந்து பாரணை செய்தல் வேண்டும் என்று கந்தபுராணம் விதிக்கின்றது. கந்தவேள் சூரபத்மனை வெற்றி கொண்ட நாளே கந்தசஷ்டி. நமது உள்ளத்தில் ஆட்சி செய்து வாழும் காமம் முதலிய சூரபதுமனை முருகவேளின் ஞானவேலினால் அழித்து, பேரின்பம் எய்தும் குறிப்பே சூரசம்ஹாரத்தின் பொருளாகும்.

அதற்குரிய ஆன்மீக வீரம் பெற உதவுவதே கந்தசஷ்டி விரதமாகும். கந்தசஷ்டி விரதம் இருக்கும் நாட்களில் செகமாயை.... என்று தொடங்கும் திருப்புகழைப் பாராயணம் செய்வோருக்கு குழந்தைப் பேறு கிடைக்கும் என்று கூறியுள்ளார். வள்ளிமலை ஸ்ரீச்சிதானந்த சுவாமிகள். கந்தசஷ்டி விரதம் இருப்போருக்கு குடும்பத்தில் மன நிம்மதி உண்டாகும். எதிரிகள் தொல்லை நீங்கும்.

## நன்மக்கட் பேறும் கிடைக்கும் என்பது உண்மை.

சஷ்டி ஆறு நாட்களும் கந்தபுராணம் படிப்பது என்பது ஒருவகை வழிபாடாகும். பாம்பன் ஸ்ரீமத் குமர குருபரதாச சுவாமிகள், கந்தபுராணத்தின் சுருக்கமாக ‘முதல்வன் புராணபடிப்பு’ என்னும் பத்து பாடல்களை அருளியுள்ளார். இதனைப் பாராயணம் செய்தால் முழு கந்த புராணத்தையும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும்.

மேலும் குமரகுருபர சுவாமிகள் பாடியுள்ள கந்தர் கலிவெண்பாவும் கந்தபுராணத்தின் சாரமாகும். பிரதமை தொடங்கி சஷ்டி முடிய ஆறு நாட்களும் எதுவும் சாப்பிடாமல் விரதமிருந்து, வள்ளி மணவாளனை பூஜை செய்பவர்களும் உண்டு. ஆறு நாட்களும் உபவாசம் இரக்க முடியாதவர்கள் சஷ்டி அன்று மட்டுமாவது எதுவும் சாப்பிடாமல் இருப்பது நல்லது.

மற்ற தினங்களில் பால், பழம் சாப்பிடலாம். முருகனுக்காக வெள்ளிக்கிழமை விரதம் இருப்பவர்கள் அதை ஐப்பசி மாத முதல் வெள்ளிக்கிழமையன்று தொடங்குவது சிறப்பு. அதிகாலையில் எழுந்து நீராடி, அன்றைய பூஜை முதலானவற்றை முடித்துக் கொள்ளவேண்டும்.

அதன்பிறகு முறைப்படி முருகப்பெருமானின் விக்கிரகத்தையோ அல்லது படத்தையோ வைத்து பூஜை செய்ய வேண்டும். வீட்டில் பூஜையை முடித்தபின், கோயிலுக்குச் சென்று, அங்கும் சிறப்பு தூப, தீப தைவேத்தியங்களுடன் வழிபாடு செய்யவேண்டும்.

இரவில் பால் பழம் மட்டும் அருந்தலாம். சுப்பிரமணிய புஜங்கம், ஸ்கந்த வேத பாத ஸ்தவம், சண்முக சட்கம், சுப்பிரமணிய பஞ்சரத்னம், திருப்புகழ், கந்தசஷ்டி கவசம், சண்முக கவசம் முதலான நூல்களை ஆறு நாட்களும் பாராயணம் செய்வது விசேஷம்.

## வேண்டுவன யாவும் தரும் இந்த விரதத்தை எப்படிக் கடைப்பிடிப்பது?

கந்தசஷ்டி தினம் முதல் சூரசம்ஹாரம் வரை மிக எளிமையான சைவ உணவினை, குறைந்த அளவில் உட்கொண்டு எப்போதும் முருகனின் சிந்தனையிலேயே விரதம் இருங்கள். பொதுவாக விரத தினங்களில் மக்கள் சைவமாக இருந்தால் போதும் என்று எண்ணிக்கொண்டு, பலகாரங்களை விருப்பமாக உண்ணுகின்றனர். ஆனால் விரதத்தை நியமத்தோடு கூடியதாக இருப்பதே முழுபலனைத் தரும். கந்தசஷ்டி விரதம் இருப்பவர்கள் மதியம் உச்சிவேளையில் ஒருபொழுது மட்டும் பச்சரிசி உணவு தயிர் சேர்த்து உண்ணவேண்டும். காலை மற்றும் இரவில் பால், பழங்கள் மட்டும் சாப்பிடலாம். ஆனால், வயோதிகர்கள், நோயாளிகள் ஆகியோர் விரதத்தின் போது அவரவர் உடல் நிலைக்கு தக்கபடி நடந்து கொள்ள விதிவிலக்கு உண்டு. காலை, மாலை ஆகிய இருவேளையும் நீராடுவது நல்லது. காலை,மாலை வழிபாட்டின் போது அவசியம் கந்தசஷ்டி கவசம் பாராயணம் செய்வதோ அல்லது கேட்கவோ செய்யவேண்டும்.ஆறு நாட்களும் அருகிலுள்ள முருகன் கோயிலுக்கச் சென்று தரிசனம் செய்வதும், கந்தபுராணத்தைக் கேட்பதும் அவசியம். மலைக்கோயிலாக இதிருப்பின், காலையிலும், மாலையிலும் முருகனுக்குரிய துதிகளை மனதில் ஜபித்தபடியே கிரிவலம் வருவது நன்மை தரும்.

*மூலம் : இணையத்தளம்*

# பகவத்கீதை மூலம் யான் அறிந்தவை

முதற் கடவுள் கிருஷ்ணர் இவரது பெற்றோர். தேவகியும் வாசுதேவரும் கிருஷ்ண உருவமே ஆதி உருவம். எமது உடலின் உரிமையாளன் கிருஷ்ணரே. கடவுள் உடலுக்குள் இருக்கின்றார். எல்லா உயிர் வாழிகளுக்கும் கிருஷ்ணரே தந்தை.

கிருஷ்ணர் கூறுகின்றார். " சூரியன் சந்திரன் நெருப்பு ஆகியவற்றின் பிரகாசம் என்னிடமிருந்தே வருகின்றது. நான் எல்லோருடைய இதயத்திலும் வீற்றிருக்கின்றேன். என்னிடமிருந்தே ஞாபக சக்தியும் மறதியும் உண்டாகின்றன.

"வேதாந்தம் தொகுத்தவனும் வேதங்களை அறிபவனும் நானே. மூவுலகையும் காப்பாற்றுபவனும் நானே." எனவே கிருஸ்ணரது கருணையினாலே நாங்கள் வாழ்கின்றோம்.

பகவான் கூறுகின்றார் "மரணநேரத்தில் பிரம்மனாகவோ ப்ரமாத்மாவாகவோ வோதியானிப்பவர்கள் நிச்சயமாக ஆன்மீக வானத்தை அடைகின்றனர். பகிரங்கமாக அறிவிக்கின்றார். எல்லா விதமானதர்மங்களையும் கைவிட்டு என்னிடம் மட்டுமே சரண் அடைவாயாக. உன்னை எல்லாப் பாவ விளைவுகளிலிருந்தும் விடுவிக்கின்றேன். பயப்படாதே என்னைவிட உயர்ந்ததோ சமமானதோ எதுவும் இல்லை.

பகவான் இச்சொல் சமஸ்கிருதச் சொல் வியாச தேவரின் தந்தை பராசர முனிவரினால் விளக்கப்பட்டுள்ளது. செல்வம், புகழ், பலம், அழகு, அறிவு மற்றும் தியாகம் இவற்றை முழுமையாக உடைய பரம புருசரே பகவான் என்று அழைக்கப்படுகின்றார். கிருஷ்ணரே பகவான். பகவான் வீற்றிருக்கும் இடம் வைகுண்டம்.

மனிதனுக்கு எதிரிகள் மூவர் 1. காமம், 2. கோபம், 3. பேராசை, வழிபாட்டால் இவர்களை வெற்றி கொள்ள வேண்டும்.

மிருக பலி யாகத்தில் ஒரு மிருகம் கொல்லப்படலாம். என்று கூறப்பட்டுள்ளது. இங்கே யாகம் என்பது அந்த மிருகத்திற்கு புதுவாழ்வு கொடுப்பதாகக் கூறப்படுகின்றது. மிருக வாழ்விற்கும் சில சமயம் மனித வாழ்விற்கும் உயர்த்தப்படுகின்றது.

கொலை கிருஷ்ணர் உணர்வில் செயற்பட்டவன் கொலை செய்தாலும் பாதிக்கப்படமாட்டான். உயர் அதிகாரியின் கட்டளைப்படி கீழ் உள்ள போர் வீரன் கொலைசெய்யும் போது அவன் தண்டனைக்கு உட்பட்டவன் அல்ல. தன் சொந்த விருப்பில் கொலை செய்தால் நீதி மன்றம் தண்டிக்கும்.

ஆன்மா இதயத்தில் உள்ளது. உடலின் இயக்கத்திற்குத் தேவையான எல்லாச் சக்திகளும் இதயத்திலிருந்தே உருவாகின்றன. அணு ஆத்மா பரமாத்துமாவுடன் இணைந்து இதயத்தில் நிச்சயமாக இருக்கின்றது. ஆன்மா எப்போதும் அறிவும் உணர்வும் நிரம்பியவன். உணர்வே ஆத்மாவின் அறிகுறியாகும் ஆன்மாவைக் காண முடியாது. உணர்வு இருப்பதன் மூலம் அறியலாம்.

பரமாத்மா அணு ஆத்மா இருவருமே உடல் எனப்படும். உடல் ஒரு ஜடப்பொருள். உடலின் ஆன்மா இருக்கும் போது உணர்வானது உடல் முழுவதும் காணப்படுகின்றது. ஆன்மா நீங்கிய உடனே உணர்வு இல்லை. அறிவுள்ள மனிதனால் இதனைப் புரிந்துகொள்ள முடியும்.

பகவானின் தொண்டர்கள் – தேவர், இந்திரன், சூரியன், சந்திரன், வருனன், வாயுதேவன் இவர்களால் நமக்கு உணவுவகை வருகின்றது. பிரமா சிவன் போன்ற தேவர்களும் பகவானை வழிபடுகின்றனர். கிருஷ்ணர் உணர்வில் இருப்பவன் பிராமனை விட உயர்ந்தவனானவன். மனதைப் பகவானுடன் ஈடுபடுத்திவிட்டால் புலன்கள் வேறு விடயங்களில் ஈடுபட வாய்ப்பில்லை. கடவுள் பக்தியினால் மனதைக் கட்டுப்படுத்த முடியும். கடவுள் எல்லாரிடமும் சமமான அன்புடையவர். கடவுளுக்கு சாதி இனபேதம் இல்லை.

தேவர்கள் வேத இலக்கியங்களில் பகவான் விஷ்ணுவின் பக்தர்களே தேவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறப்பு மாற்றம் பௌதீக ஆசைகளின் காரணமாக ஆன்மா சில சமயம் தேவனாக, மனிதனாக, மிருகமாக, பறவையாக சிலவேளை புனித மனிதனாகப் பிறக்கின்றான்.

தொகுப்பு :
**வே. தனபாலசிங்கம்,**
*கொல்லங்கலட்டி.*

**என்னைக் கேலி செய்தனர். வேகமாகச் சென்று திரும்பிப் பார்த்தேன். அவர்கள் அதே இடத்தில் இருந்து வேறு ஒருவரைக் கேலி செய்து கொண்டிருந்தனர்.**

# நாதம்....
# நாதம்....
# பல்லவி!

உலகிலேயே மிகவும் புகழ் பெற்ற பிரபலமான மொழி இசை ! என்கின்றார் கொரிய இசைக்கலைஞர் ஸை (Psy). இசையே மொழியானால், அங்கே வேறு வார்த்தைகளுக்கு வேலை இல்லை. மிக நீண்ட இசைப் பாரம்பர்யத்தையும் சரித்திரத்தையும் கொண்ட தமிழ்நாட்டு இசையில், நாகஸ்வரமும் தவிலும் மிக முக்கியமானவை. 'மங்கல இசை' என இவற்றை அழைப்பதில் இருந்தே,நம் வாழ்வில் இந்தக் கருவிகளுக்கு அளித்துவரும் முக்கியத்துவம் உணரலாம்.

'தில்லானமோகனாம்பாள்' 'கொஞ்சும்சலங்கை' என நாகஸ்வரக் கலைஞர்களைப் பின்புலமாகக் கொண்டு வெளியான திரைப்படங்கள் பெரும் வெற்றியைப் பெற்றன. நாகஸ்வர தவில் கலைஞர்கள் பலர், தங்கள் இசைத்திறமையால் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்திருக்கிறார்கள். ஆனால் அவற்றை வடிவமைத்துத் தயாரிக்கும் கைவினைக் கலைஞர்களோ எந்தப் புகழ் வெளிச்சமும் படாமல் போதிய வருமானமும் இல்லாமல் வாடுகின்றனர்.

**நாதம்... சுநாதம் !**

ஒரு காலத்தில் நாகூர், நாகப்பட்டினம் போன்ற ஊர்களில் வாழ்ந்த 'நாகர்' என்ற இனத்தைச் சேர்ந்தவர்களால் வாசிக்கப்பட்டு வந்தது. அதனால் 'நாகஸ்வரம்' என்று அழைக்கப்படுகின்றது.

'நாகஸ்வரம்', நாகசுரம், நாகசுவரம், நாயனம்' எனப் பலபெயர்களும் உண்டு. பண்ருட்டி, திருவாரூர், கம்பர் பிறந்த திருவழுந்தூர் ஊர்களில் இது தயாரிக்கப்பட்டாலும். 'நாகஸ்வரம்' என்றாலே நரசிங்கன் பேட்டையைத்தான் கைகாட்டுகிறார்கள்.

கும்பகோணத்தில் இருந்து மயிலாடுதுறை செல்லும் சாலையில் 15 கீ.மீ தூரத்தில் இருக்கின்றது நரசிங்கன் பேட்டை. இங்கு வசிக்கும் என்.ஆர். செல்வராஜ், நாகஸ்வரம் உருவாக்கும் கலைஞர். "என் தாத்தா நாராயணசாமி, அவரோட அப்பா கோவிந்தசாமி எல்லோருக்கும் இந்தத் தொழில் தான். அப்போ 'சமசுமி' (சமஸ்ருதி)ங்கிற ஒரு வகைதான் நாகஸ்வரத்துல பயன்பட்டுக்கிட்டு இருந்திச்சு. அதாவது 'சுத்த மத்யமம்' ஸ்வரத்தை இசைக்காது. ஒரு நாகஸ்வரக் கலைஞர், தான் என்ன நினைக்கின்றாரோ, அதை நாகஸ்வரத்துல வாசிக்க முடியாது. 'எல்லாரும் இந்த வகை நாகஸ்வரத்தையே ஏன் தயாரிக்கணும்!' னு எங்க அப்பா ரெங்கநாத ஆசாரி யோசிச்சார்.

பல இடங்களில் தேடி அலைந்து கத்துகிட்டு வந்து ஒரு புது நாகஸ்வரத்தை வடிவமைத்தார். அது ‘சுத்த மத்யமம்’ ஸ்வரத்துலயும் பேசும் (வாசிக்கும்). இதுல ஒரு நாகஸ்வரக் கலைஞரால நினைச்சத வாசிக்க முடியும். அதாவது, மாடு ம்மாங்கிறதுக்கும். நாம ‘ அம்மா’ னு சொல்லுறதுக்கும் வித்தியாசம் இருக்கு இல்லியா... அது மாதிரி.

பிரபல வித்துவான் திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் பிள்ளைகிட்ட அப்பா, அந்த நாகஸ்வரத்தைக் காண்பிச்சிருக்கார். அதை வாசிச்சு பிரமிச்சுப்போன அவர் ‘நானும் எத்தனையோ நாகஸ்வரத்ல வாசிச்சிருக்கேன். இது ரொம்ப அருமையா இருக்கு’னு கட்டி அணைச்சுப் பாராட்டியிரக்கார். அதை ஒரு பாராட்டுப் பத்திரமாகவே எழுதிக் கொடுத்திருக்கார். என் அப்பாவுக்கு 1955-ம் ஆண்டு காமராஜர் ஆட்சிக்காலத்துல கைவினைக் கலைஞர்களுக்கான விருது கொடுத்தாங்க. அப்புறம் திருச்சி, ஈரோடு, சென்னையில் இருக்கும் நாகஸ்வர வித்வான்கள் எல்லாம் சேர்ந்து ஒரு விருது கொடுத்தாங்க. ராஜரத்தினம்பிள்ளை, அப்பாவை கூடவே வச்சுக்கிட்டார். வேற யாருக்காவது இதே மாதிரி நாகஸ்வரம் செஞ்சு குடுத்துவாரோங்கிற எண்ணம் அவருக்கு. ராஜரத்தினம் பிள்ளையோட கடைசிக்காலதில தான் என் அப்பாவால மற்ற கலைஞர்களுக்கும் நாகஸ்வரம் செஞ்சு கொடுக்க முடிஞ்சுது.

காருகுறிச்சி அருணாசலம் பிள்ளை, வேதாரண்யம் வேதமூர்த்தி, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், குழிக்கரை எஸ்.பிச்சையப்பா, சைதாப்பேட்டை நடராஜன், அடையாறு வாசு, திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளைனு எத்தனையோ பிரபல வித்வான்கள் அப்பாகிட்ட நாகஸ்வரம் வாங்கிட்டு போயிருக்காங்க. நாகஸ்வரக் கலைஞர்களோட குரல் வளத்திற்கு ஏற்ப தான் நாகஸ்வரம் பேசும். அப்பாவுக்குப் பிறகு, இந்தத் தொழிலை நான் செய்ய ஆரம்பிச்சேன். மூணுபேர் சேர்ந்து, ஒரு நாதஸ்வரம் செய்யறதுக்கு குறைஞ்சது ஆறு நாட்கள் ஆகும். ஒரு நாகஸ்வரம் 5,000 ரூபாலருந்து 5,500 ரூபா வரைக்கும் விலைபோகும். எங்களுக்கு 1,000 – 1,500 ரூபாய் கிடைக்கும். இங்கே நாலு குடும்பங்கள் இந்தத் தொழிலில ஈடுபட்டிருக்கோம். இந்தத் தொழிலுக்கு, தச்சுவேலை, கொல்லன் வேலை, கடைசல் வேலை மூணும் தெரிஞ்சிருக்கணும்” என்கிற செல்வராஜீக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் இன்ஜினியறிங் படிக்கிறார். இளைய மகன் தந்தையுடன் சேர்ந்து பரம்பரைத் தொழிலிலேயே ஈடுபட்டிருக்கின்றார்.

“நாகஸ்வரக் கலைஞர்களை கௌரவிப்பது போல எங்களையும் கௌரவிக்க வேண்டும். எங்களையும் ஊக்கப்படுத்தினால்தானே இந்தத் தொழில் வளரும். சில கைவினைக் கலைஞர்களுக்கு அரசு ஓய்வூதியம் கொடுக்குது. அதே மாதிரி எங்களுக்கும் கொடுக்கணும். எங்கமேலயும் அரசு கொஞ்சம் கரிசனம் காட்டணும்” என்கின்றார் செல்வராஜ்.

**எப்படித் தயாராகிறது நாகஸ்வரம்?**

நாகஸ்வரம் தேவைக்கு ஏற்ப இரண்டு, இரண்டரை, மூன்று அடிகளில் தயாரிக்கப்படுகின்றது. இதன் முக்கிய பாகங்கள் 'அனசு' அற்றும் 'உலவு' அனசு புனல் மாதிரி இருக்கும் முனைப்பகுதி ஊமத்தம்பூதான் இதற்கு முன் மாதிரி; வாகை மரத்தில் செய்யப்படுகின்றது.

'உலவு' (குழல்போல இருக்கும்) எனப்படும் பகுதிதான் நாகஸ்வரம் இது. ஆரம்பத்தில் ரோஸ்வுட்டில் செய்யப்பட்டது. இப்போ ஆச்சா மரத்தில் செய்யப்படுகின்றது. இதற்கு 85 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆச்சா மரக்கட்டைகள், வாசல் நிலைகள், தூண்கள், ஜன்னல்களைத் தேடிப் போய் வாங்குகிறார்கள்.

கடைசல் முறையில் நாகஸ்வரம் செய்யத் தேவையான ஆயுதங்களை இவர்களே கொல்லன் பட்டறையில் அளவு, வடிவம் சொல்லி தயாரித்து வாங்குகிறார்கள். நாகஸ்வரத்தின் 'திமிரி', 'பாரி' என இரண்டுவகை. திமிரி உயரம் குறைவாகவும், ஆதார சுருதி அதிகமாகவும் இருக்கும். 'பாரி', உயரம் அதிகமானதாக ஆதார சுருதி குறைவானதாக இருக்கும். நாகஸ்வரத்தில் 12 துளைகள் இருக்கும்.மேலிருந்து வரும் 7 துளைகள் தான் இசைப்பதற்கு ஏற்றவை. மற்ற 5 துளைகளை தேவைக்கு ஏற்ப அவ்வப்போது மெழுகால் அடைத்தும் திறந்தும் பயன்படுத்துவார்கள்.

**சீவாளி**

நாகஸ்வரத்தின் மேற்பகுதியில் பொருத்தப்படுவது சீவாளி. இது திருவாவடுதுறை, மயிலாடுதுறை, திருவீழிமிழலை, திருமாந்துறை ஆகிய ஊர்களில் தயாராகிறது ஆற்று ஓரத்தில் வளர்ந்திருக்கும் நாணலின் அடிப்பாகத்தை (நாணல் தட்டை – 'கொறுக்குத் தட்டை') துண்டு துண்டாக வெட்டி, காயவைத்து, நெல் அவிழ்ப்பதுபோல ஆவியில் அவித்து சரியான அளவில் தயார்செய்து, பழைய சோற்றுத் தண்ணீரில் ஊறவைக்கின்றார்கள். மறுபடியும் காயவைத்து, செம்பைப் பயன்படுத்தி அடிப்பாகத்தை கலசம் மாதிரி செய்து வளையம் வடிவத்திற்குக் கொண்டுவந்து சீவாளி ஆக்குகின்றார்கள். ஒரு டஜன் 1,500 ரூபாய் வரை விற்கப்படுகின்றது.

**மேளங்களின் ராஜா !**

ஒரு நிமிடம் போதும்... 'திடும்.... திடும்... திடும்... தும்.. தும்...' என முழங்குகின்ற இசை, முதியவர்கள் தொடங்கி குழந்தைகள் வரை அத்தனை பேரையும் தலையை ஆட்டவைத்துவிடும். மங்கல நிகழ்வுகளில் 'கெட்டி மேளம்... கெட்டி மேளம்!' எனச் சொல்வார்கள்.உடனே மேளச் சத்தம் ஓங்கி ஒலிக்கும். இதற்கும் ஒரு காரணம் உண்டு. முக்கியமான மங்கல நிகழ்வு அரங்கேறும் போது அமங்கலமான வார்த்தைகள் யார் காதிலும் விழக்கூடாது என்பதற்காகத்தான் 'கெட்டி மேளம்' !

நாகஸ்வரமும் தவிலும் பிரிக்க முடியாதவை் இரண்டும் இணைந்து வரும் இசை நம் உள்ளத்தை உருக்கிவிடும். நாகஸ்வரக் கச்சேரிகளில் முதலில் தவில் இசையே

முழங்கும். நாட்டுப்புற இசையிலும் தவிலுக்கு முக்கிய பங்கு உண்டு. 'நையாண்டி மேளம்' எனப்படும் நாட்டுப்புற இசை ஊரையே திரட்டிவிடும். வேறு பக்க வாத்தியங்கள் இன்றி ஒற்றைத் தவிலை வைத்துக் கொண்டு மேடைதோறும் முழங்குகின்ற எத்தனையோ நாட்டுப்புறக் கலைஞர்கள் இருக்கிறார்கள்.

திருவையாற்றில் தயாராகும் தவிலுக்கு தனி மகத்துவம் உண்டு. தவிலின் இரு புறமும் இரண்டு தட்டுகள் இருக்கும். ஒன்று வளந்தலைத்தட்டு இன்னொன்று தொப்பித்தட்டு, கைவிரல்களில் வளையம் மாட்டிக்கொண்டு வாசிக்கப்படும் பக்கம் வளந்தலைத்தட்டு, குச்சியைக்கொண்டு வாசிக்கப்படும் பக்கம் தொப்பித்தட்டு. இவற்றைச் சுற்றியுள்ள வலைகள் முக்கியமானவை. இந்த வலைகள் அடிக்கடி உடைந்துவிடும். இந்த வலைகளைப் பிரதானமாகச் செய்வதுடன் முழுத் தவிலையும் வடிவமைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார். டிஜி பரமசிவம். மூன்று தலைமுறைகளாக இதில் ஈடுபட்டிருக்கிறது இவரது குடும்பம். திருவையாற்றில், தியாகராஜ சுவாமிகள் வாழ்ந்த திருமஞ்சன வீதியில் நுழைந்ததும், இரண்டாவதாக இருக்கிறது அவர் வீடு. 'டி.ஜி.பரமசிவம் தவில் வலைக்கலைஞர்' என்கிற போர்டு வரவேற்கிறது.

பரமசிவத்திற்கு மேளத்தைப் போலவே 'கணீர்' குரல். "என் தாத்தா பேரு குமாரசாமி.. பெரியப்பா அப்பாகண்ணுப்பிள்ளை... என்னோட அப்பா கோவிந்தராஜ்ப் பிள்ளை. குடும்பத் தொழிலே தவிலும் வலையும் தயார் பண்ணுறது தான். அந்தக் காலத்தில மூங்கில வெட்டி, செதுக்கி வலை செய்வாங்க. மூங்கில் சீக்கிரமே உடைந்து போயிடும். நான்தான் முதல் முதல்ல இரும்பு வலைதயார் பண்ணினேன். மூங்கிலுக்குன்னு இயற்கையா ஒரு சுதி, நாதம் இருக்கு. இரும்புக்கு அது கிடையாது. இருந்தாலும் நீண்டகாலம் உழைக்கும். இரும்பு பைப்பை வளைச்சு, ஜாயின்ட் பண்ணி, வெல்டிங் செஞ்சு ஒட்டவெச்சுடுவோம். அப்புறம் புளியங்கொட்டை பசையையும் மரத்தூளையும் கலந்து வலையில கொஞ்சம் சொஞ்சமா 20 நாளைக்கு தடவுவோம். முன்னாடி எல்லாம் புளியங்கொட்டையை இடிச்சு, நசுக்கி, ஊறப்போட்டு, குடகல்ல ஆட்டி, மண்சட்டியில போட்டுக்காய்ச்சி பசையாக்குவாங்க. இப்போ புளியங்கொட்டையை மெஷினில அரைச்சு பவுடராக்கி, பசையாக்குறோம்.

தவில் கட்டைக்கு ( தவிலின் மரப்பகுதி) ஏற்ப வலைகள் பண்ணுவோம். தவில் கட்டையை பலா மரத்துல இருந்து வெட்டி எடுத்து, குடைஞ்சு செய்வாங்க. இதுக்குனு தனியா ஆக்கள் இருக்காங்க. அவங்ககிட்ட அதை வாங்கிட்டுவருவோம். இது தவிலின் 'வாவட்டஅளவு', அதற்கு ஏற்ப வலையை ராவுவோம். பிறகு அதில் சுரவார்ங்கிற மாட்டுத்தோலைச் சுற்றி அழுக்குப் போகத் தேச்சு வெள்ளையாக்கி, அதுக்கு மேல புளியங்கொட்டைப் பசையை இரண்டு நாளைக்குத் தடவுவோம். அதுக்கு மேல தோல்போட்டு, அப்புறம் தவிலை மூட்டணும். முன்னாடி எல்லாம் வார்ல இழுத்துக் கட்டுவாங்க. சில சமயம் பிஞ்சுபோயிடும். இப்போ அப்பிடி இல்லை. எல்லாமே இரும்புலயே வந்துடுச்சு. மேல்பாகம் கிளிஞ்சுச்சுன்னா, அதை மட்டும் தனியாகக் கழட்டி சரி பண்ணிக்கலாம்.

இசைப்பள்ளியில், இசைக் கல்லூரியில் மாணவர்கள் பயிற்சி செய்யும் 'சிலம்பக் கட்டையையும்' நான் தயார் பண்றேன்.

வலங்கைமான் ஏ.சண்முகசுந்தரம்பிள்ளை, திருச்சேடி டி.ஜி முத்துக்குமாரசாமிபிள்ளை, ஹரித்துவார மங்கலம் ஏ.கே பழனிவேல், திருவாலபுத்தூர் டி.ஏ.கலியமூர்த்தி, தஞ்சாவூர் டி.ஆர். கோவிந்தராஜன், வேதாரண்யம் வி.ஜி. பாலசுப்ரமணியம், திருநாகேஸ்வரம் டி.ஆர். சுப்ரமணியம், மன்னார்குடி எம்.ஆர். வாசுதேவன், திருப்பங்கூர் டி.ஜி. முத்துக்குமாரசாமி, கோவிலூர் கல்யாணசுந்தரம், இரும்பாவனம் கே. எஸ் கண்ணன், திருக்கடையூர் டி.ஜி பாபு, நாங்கூர் என்.கே. செல்வகணபதி, திருராமேஸ்வரம் டி.பி.ராதாகிருஷ்ணன், வடபழனி எஸ்.ராஜாராமன், வில்லியம்பாக்கம் வி.எம்.பழனிவேல்... இப்படி எத்தனையோ வித்வான்கள் என்கிட்ட தவில் வாங்கிட்டு போயிருக்காங்க.

தவில் அடிக்க விரல்ல மாட்டிக்கறது கூடு. ஜவ்வரிசியை வேகவெச்சு, சீமெண்ட் கலந்து, அம்மியில அரைச்சு மாவாக்குவாங்க. வாசிக்கிறவங்களோட விரல்ல சுத்திடுவாங்க காலையில காஞ்சு போயிருக்கும். வாசிக்கும் போது எடுத்து மாட்டிக்குவாங்க. தவில் செய்யறவங்க நிறையப்பேர் இருக்காங்க... ஒவ்வொருத்தருக்கும் ஒரு சிறப்பு இயல்பு இருக்கு. நாகஸ்வரம்னா நரசிங்கன் பேட்டை ரங்கநாத ஆசாரி குடும்பம், தவில் கட்டைன்னா, திருவாவடுதுறைதான்.

மற்ற பாகங்கள் எல்லாம் தயாராக இருந்தா, தவில் செய்யறதுக்கு ஒரு வாரம் போதும். உரு தவில் 25 ஆயிரம் ரூபா வரைக்கும் விலைபோகும். பெருசா லாபம் கிடைக்காதுன்னாலும்., ஆத்மார்த்தமான ஒரு தொழிலைச் செய்கின்றோம்கிற திருப்தி, சந்தோசம்.

நாகஸ்வரம் செல்வராஜைப் போலவே பரமசிவத்தின் குரலிலும் ஏக்கம் வெளிப்படுகின்றது. மனிதர்கள் எல்லோருமே ஏதோ ஓர் அங்கீகாரத்துக்காக ஏங்குகின்றவர்கள்தாம். நவீக இசைக் கருவிகள் எத்தனை வந்தாலும் இதுபோன்ற பாரம்பரிய இசைக்கருவிகள் தான் நமக்கு நம் பழங்காலத்தை நினைவூட்டுகின்றன. நினைவுகளை காலத்தால் பின்னோக்கி இழுத்துச் செல்கின்றன. மனதை உற்சாகம் கொள்ளச் செய்யும் இந்த இசை வடிவங்களை, அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லவேண்டிய கடமை அரசுக்கும் நமக்கும் இருக்கிறது!.

**நீ எங்கு சென்றாலும் நல்லவற்றையே செய்,**
**அப்போது நீ செய்த நன்மைகள் உனக்கே திரும்பிவரும்.**

# சிறுவர் விருந்து

## நலம்தரும் நாயகன் விரதம்

சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து!

கந்தசஷ்டி விரதகாலம்இது. உங்கள் வீட்டிலும்கூட அம்மா, அப்பா, அல்லது யாராவது கந்தசஷ்டி விரதம் இருப்பார்கள். இந்த விரதத்தை ஏன் பிடிக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

சூரபத்மனிடம் தங்கள் தேவலோக அரசையும் அந்த தேவ உலகத்தையுமே பறிகொடுத்துவிட்டு தேவர்கள் பெரும் துன்பப்பட்டார்கள். தெய்வேந்திரனும், அவன் மனைவி சசிதேவியும் சூரன் கையில் அகப்படாமல் குயில் வடிவம் எடுத்து பூவுலகத்துக்கு பறந்து வந்துவிட்டார்கள். மகாவிஷ்ணு சூரனுடைய தம்பிகளிடம் தோற்று தமது சக்கராயுதத்தையும் அவர்களிடம் பறிகொடுத்து விட்டார். பிரம்மா சூரனுக்குத் தினசரி பஞ்சாங்கம் படித்துக் கொண்டிருந்தார். வருணன், வாயு, மருத்துத் தேவர்கள், அக்கினி முதலியோர் கடலிலே மீன்பிடித்து சூரனுக்கும் அவனது பரிவாரங்களுக்கும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நவக்கிரகங்களும் சூரனுடைய சிம்மாசனத்துக்கு முன்பு அவன் கால் வைத்து ஏறும் படிக்கட்டுக்களாகக் கிடந்தார்கள். தேவராசன் இந்திரனுடைய மகன் சயந்தனும் தேவகுருமார்களும் பரிவாரங்களும் லங்காபுரியின் பாதாளச் சிறையில் அடைபட்டுக் கிடந்தார்கள். பல்லாண்டுகள் இந்த துன்பத்தை அனுபவித்த பின் வியாழபகவான் ஆலோசனைப்படி இந்திரனும் தேவர்களும் கந்தபிரானை மனதிலே வைத்து உபவாசம் இருந்து முருகப் பெருமானை அழுதுதொழுது வழிபட்டார்கள். இதன் பயனாக மகா சக்தியாகிய எம்பிராட்டி தந்த சக்திவேலை கையில் ஏந்தி சிவபிரானின் அனுமதியோடு நவவீரர்களும், பூதகணங்களும் படையாகச் சூழ எழுந்தருளி வந்த முருகப் பெருமான் ஆறு நாட்கள் போர்புரிந்து வெல்லமுடியாத சூரனின் தம்பியர் தாரகன், சிங்கமுகன், ஆகியோருடன் சூரியனை சிறைப்பிடித்த பாணுகோபனையும் மற்றும் அசுரப்படை அனைத்தையும் அவர்களுடைய மாயா சக்திகளையும் கூண்டோடு அழித்து சிவபெருமானிடம் அழியா வரம் பெற்ற சூரபத்மனை அடக்கி, அவன் உடலை இரண்டாகப் பிளந்து சேவலும் மயிலும் ஆக்கி ஞானத்தைக் கொடுத்து, அருள்புரிந்து, கொடியும் வாகனமும் ஆக்கிக் கொண்டார்.

தேவர்களுக்கு விடுதலை கொடுத்து தேவலோகத்தை சீர்செய்து சகல நலன்களோடும் அவர்களை தேவலோகத்தில் வாழவைத்தார். இந்த விரதத்தை பிடிப்பவர்கள் தாம் வேண்டும் வரங்களைப் பெறுவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

60 வருடங்களுக்கு முன்பு இதை எழுதுபவரின் பதின்ம வயதில் கிடைத்த சான்ற இது. அயல் வீட்டில் ஒரு கணக்காளரின் சிறிய தாயார் வசித்து வந்தார். கணக்காளரின் தந்தையின் இரண்டாவது மனைவி அவர். மிக சிறு வயதில் தாயை இழந்த மூன்று சிறுவர்களை வளர்ப்பதற்காகவே அவர் திருமணம் செய்து கொண்டார். நாற்பத்தைந்து வயதான அந்த அம்மையாருக்கு சொந்தக் குழந்தைகள் இல்லை. வளர்த்த மகன்கள் மூவரும் நன்றாகப் படித்து உத்தியோகம் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

அந்த நிலையில் தனக்கு ஆறுதல் தர ஒரு பெண்குழந்தை கிடைக்கவில்லையே என்று சொல்லி அவர் வருந்துவதுண்டு. அவரிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்த ஒரு சிறுமி விளையாட்டாக ஒரு நாள் “சின்னம்மா! கந்தசஷ்டி விரதம் பிடியுங்கோ! உங்களுக்கு ஒரு தங்கச்சி பாப்பா கிடைக்கும் என்று கூறினாள். ஆத்மஜோதி முத்தையா அவர்களுக்கு எழுதி கந்தசஷ்டி விரதம் முறையாகப் பிடிக்கும் விபரங்களையும் சிறிய கந்தசஷ்டிக் கவச புத்தகத்தையும் பெற்று அந்த அம்மையாரிடம் கொடுத்தாள் அந்தச் சிறுமி. சிறுமியிடம் அளவற்ற அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்த அந்த அம்மையார் அவற்றை நம்பிக்கையோடு பெற்று ஒவ்வொரு மாதத்தில் வரும் சஷ்டி விரதத்தை முறையாக அனுட்டிக்கத் தொடங்கினார். அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் அவருக்கு அழகிய பெண் குழந்தை ஒன்று பிறந்தது. சண்முகாதேவி என்று பெயரிட்டு சீரும் சிறப்புமாக வளர்த்தார்கள். இன்று அந்த சண்முகாதேவி இந்த நாட்டில் ஏதோ ஒரு பிரதேசத்தில் மூன்று பிள்ளைகளுடன் நல்ல கணவருடன் நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றாள். இது உண்மையான செய்தி.

எனவே சொந்த நாட்டையோ, பொருள்களையோ, சொத்துக்களையோ இழந்தவர்கள் நல்ல பேறுகளை, குழந்தைச் செல்வங்களைப் பெறவிரும்புவர்கள் கந்தசஷ்டி விரதத்தை முறையாக அனுட்டித்தால் நிச்சயமாக அதைப் பெறுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நீங்களும் விரதமிருக்க பெரியோர்களுக்கு அனுசரணையாக இருங்கள், அவர்களை மதித்து நடவுங்கள். கந்தவேள் பெருமான் உங்களுக்கும் நல்லருள் புரிவார்.

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

* **அமரர் மகாஜன சிற்பி தெ.து.ஜயரட்ணம் அவர்களின் நினைவுப் பேருரை**

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவரும், மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய அமரர் தெ.து.ஜயரட்ணம் அவர்களின் நினைவுப் பேருரை வைபவம் 23- 10-2016 அன்று துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்றது. தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் "இளைய சமூகத்தினரிடம் சுய ஒழுக்கத்தையும் கற்கும் ஆற்றலையும் மேம்படுத்தல்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

* **மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையாருக்கு சித்திரத்தேர்**

பிரசித்திபெற்ற மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையாருக்கு மிகப்பெரிய சித்திரத்தேர் உருவாக்கப்படவுள்ளது. "சிற்பகலா விநோதன்" புத்தூர் செ.பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் இத்தேர் உருவாக்கம் பெறவுள்ளது.

* **நீர்வேலியில் திருச்செந்தூர் புராணம் உரைநூல் வெளியீடு**

நீர்வேலி அரசசேகரிப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ. சோமதேவக் குருக்கள் அவர்களால் திருச்செந்தூர் புராணம் உரை நூல் மீள்பதிப்பு வெளியிடப்பட்டது. நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதரால் எழுதப்பட்ட இவ்வுரை நூல் நூற்றாண்டு பழமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 21-10-2016 அன்று நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இந்நூல் வெளியீட்டு விழா விரிவுரையாளர் திரு.ச. லலீசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

* **அமரர் சுவாமிநாதன் ஸ்ரீ பாஸ்கரன் நினைவு வைபவம்**

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக, ஆசிரியராக, சமூக சேவையாளராக விளங்கிய திரு. சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் 17ம் ஆண்டு நினைவுநாள் வைபவம் 26-10-2016அன்று மல்லாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

* **அனுராதபுரம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் காடையர்களால் தாக்கப்பட்டது.**

11-10-2016 அன்று நவராத்திரி விழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அத்துமீறிப் புகுந்த சிலர் ஆலய புராதன விக்கிரகங்களை உடைத்ததோடு ஆலய வழிபாட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவரை ஆயுதங்களால் தாக்கிவிட்டுச் சென்றுவிட்டார்கள். இச் செய்தியறிந்து

சைவ சமய நிறுவனங்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்தவண்ண முள்ளனர்.

* **இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவு விழா**

திணைக்களத்தின் முப்பதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு "நாவலர் மாநாடு" நவம்பர் 18, 19, 20ம் நாள்களில் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்தியாவிலிருந்தும் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக பல சான்றோர்கள் வரவுள்ளனர்.

* **மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவில் ஸ்கந்தஷஷ்டி திருவிழா**

ஐப்பசி மாதம் 15ம் நாள் 31-10-2016 முதல் திருவிழா நடைபெறும். 02-11-2016 புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு வேல் வகுப்புப்படித்து வேல் வாங்கும் விழா நடைபெறும்.

05-11-2016 சனிக்கிழமை சூரன்போர்

06-11-2016 மாலை 7.30 திருக்கல்யாணம் நடைபெறும்.

* **தெல்லிப்பழை குருநாதசுவாமி கோவில் கந்தசஷ்டி விழா**

31-10-2016 அன்று ஆரம்பமாகி 06-11-2016 வரை சிறப்பாக நடைபெறும். தினமும் கந்தபுராணப்படிப்பு இடம்பெறும். 05-11-2016 மாலை சூரசங்காரம் இடம்பெறும்.

# நினைவு அஞ்சலி



## அமரர்

## திருமதி காயத்திரி கணேசன்

**அவர்கள்**


**( முதலாவது அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி )**

**( முன்னாள் அதிபர், இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி )**

**சைவ மங்கையர் கழக உறுப்பினர்**

**தனது நூறாவது வயதில் அமெரிக்காவில் காலமானார்**


நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.




அமரர் வே. கதிரவேலு ( அப்பு )

[கிளிநொச்சி, உருத்திரபுரம் குருகுல நிறுவுநர்]

அன்னாரின் உருவச்சிலை உருத்திரபுரத்தில் திறந்து வைக்கப்பட்டது.



திருச்செந்தூர் முருகன் திருக்கோவில்

Print Master. T.P. : 021-205 3322